# தமிழர் பொருண்மியம்

வாரமலர் TAMILS ECONOMY

விலை - 50/= இதழ் - 05 12.02.2023




06 புலம்பெயர்ந்த தமிழர் இலங்கையில் ..

Good life 08 நிறுவன நிறுவனர் ஜெயகாந்தன் ஜனா

மண் வளத்தை அதிகரிக்கும் மண்புழு உரம் 14

# பூக்காமல் காய்க்கும் மரம்?

தமிழர் பொருண்மியம் உங்கள் வீடு தேடி வர ... 04



# உள்ளூர் தொழிற்துறையாக அம்மாக்களின் சமையல்

கலாநிதி சி.ஜெயசங்கர்,
து.கௌரீஸ்வரன்

இன்று நமது நாடு பொருளாதார நெருக்கடியில் மூழ்கிப்போயுள்ள தருணத்தில் உள்ளூர்ப் பொருளாதாரத்தை வலுப்படுத்தி ஒப்பீட்டளவில் போசாக்கான உணவினைப் பெற்றுக்கொள்வதற்கு காரணமாக விளங்கும் உள்ளூர்த் தொழிற்துறையாக அம்மாக்களின் சமையல் விளங்கி வருகின்றது.

அம்மாக்களின் சமையல் என்பது வீடுகளில் சுவையான உணவுகளைத் தயாரித்த தாய்மார்கள் தமது உறவினர்களின், அயலவர்களின் இல்லங்களில் இடம் பெறக்கூடிய விசேட தேவைகளின் பொருட்டு அதிகமான உணவுகளைத் தயாரித்துக் கொடுப்பவர்களாக செயலாற்றிய பின்புலத்தில், நாளடைவில் பொருளாதாரத் தேவைகளின் பொருட்டு அத்தகைய சில தாய்மார்களது சிறு வரும்படியாக வளர்ச்சியடைந்துள்ளமையினை விளங்கிக் கொள்ள முடிகின்றது. இன்று இவை உள்ளூர்களின் உணவு சமைக்கும் வாழ்வு முறையாக பரிணமித்துள்ளது. மிகப்பெரும்பாலும் உள்ளூர்ப் பெண்களின் தொழில் முயல்வாக இந்த உள்ளூர் உணவுத் தயாரிப்புக் காணப்படுகின்றது.

அம்மாக்களின் சமையலானது தற்சாரப் பொருளாதாரத்தை வலுப்படுத்துவதற்கான அடிப்படை அம்சங்களைக் கொண்டிருப்பது இதன் சிறப்பியல்பாகும். அதாவது இந்த உணவுப் பொருட்களின் தயாரிப்பானது மிகப்பெரும்பாலும் உள்ளூர்த் தானியங்களையும் உள்ளூரில் விளையும் உணவுக்கான மூலப்பொருட்களையும் அடிப்படையாகக்கொண்டு மேற்கொளளப்பட்டு வருகின்றன. உதாரணத்திற்கு இடியப்பம், பிட்டு, பலவேறு அப்பங்கள் முதலிய உணவு வகைகள் உள்ளூர் நெல்லரிசியை மூலப்பொருளாகக் கொண்டுள்ளதைக் காண்கின்றோம்.

இதன் காரணமாக மிகப்பெரும்பாலும் அம்மாக்களினால் தயாரிக்கப்படும் இத்தகைய உணவுப் பொருட்களின் விலை நுகர்வாளர்களால் மலிவாகப் பெற்றுக் கொள்வதற்குரிய வகையில் காணப்படுகின்றது. அத்தோடு ஒப்பீட்டளவில் இவை போசாக்கான உணவுகளாக இனங்காணப்படுகின்றன. அதாவது உள்ளூரில் விளையும் தானியங்கள், தேங்காய், கீரை வகைகள், காய் கறிகள் முதலியவற்றைக் கொண்டு இவை தயாரிக்கப்படுவதால் நமது தட்ப வெப்ப நிலைமைகளுடன் பொருந்தக்கூடிய உள்ளூர் உணவுப்பண்பாடாக இது விளங்குகின்றது இதனால் குறைந்த விலையில் போசாக்கான உணவுகளை உள்ளூர்களில் பெற்றுக் கொள்வதற்கான வாய்ப்புக்களை அம்மாக்களின் சமையல் உணவுத் தொழிற்துறை சாத்தியமாக்கி வருகின்றது.

மேலும் இந்த உணவுப் பொருட்களின் பாதுகாப்பானது உள்ளூர் அளவில் உறுதிப்படுத்தப்படுவதாக இருக்கின்றமை குறிப்பிடத்தக்கது. அதாவது உணவினைத் தயாரிப்பவர், தயாரிக்கும் இடம், தயாரிக்கும் முறை, தயாரிக்கப்படும் நேரம், காலம் என்பவை குறித்து உள்ளூர் வாசிகள் நன்கு அறிந்தவர்களாகவே இருக்கிறார்கள். பெரும்பாலும் வெளிப்படையான திறந்த சமையல் முறைமையூடாகவே இவை தயாரிக்கப்பட்டு வருகின்றன. இதனால் அம்மாக்களின் சமையல் தொழிற்துறை நம்பகத்தன்மை கொண்டதாகக் காணப்படுகின்றது.

இவ்வாறு ஒப்பீட்டளவில் உள்ளூர் அம்மாக்களின் சமையல் தொழிற்துறை உணவுகள் பாதுகாப்பானதாகவும், நம்பகத்தன்மை நிறைந்ததாகவும், மலிவானதாகவும் காணப்படுவதால், விரைவு உணவுப் பண்பாட்டுக்குள் அகப்பட்டு அதன் காரணமாக சுகாதாரப் பிரச்சினைகளுக்கு முகங்கொடுக்கும் நகரஞ்சார்ந்து வாழ்ந்து வரும் நுகர்வு மனிதர்களுக்கும் இந்த அம்மாக்களின் உள்ளூர்ச் சமையல் உணவுகள் இலகுவில் கிடைக்கத்தக்க வகையிலான ஏற்பாடுகளும் புதிய தொழில் முயற்சிகளும் விரிவு படுத்தப்படவேண்டியது தேவையாக உணரப்படுகின்றது.

அம்மாக்களின் சமையல் மூலமாக உள்ளூர்ப் பெண்களின் பொருளாதாரம் வலுவடைவதுடன் உள்ளூர்ச் சேமிப்பு முறையான சீட்டுக்கட்டும் பண்பாடும் வலுப்பெறுகிறது. பெண்களின் பொருளாதார வலுவாக்கத்தில் சீட்டு முறை மிகவும் காத்திரமான பங்களிப்பை வழங்கி வருவது குறிப்பிடத்தக்கது. இப்பின்புலத்தில் உள்ளூர் உணவுத் தொழிற்துறையில் ஈடுபடும் பெண்கள் நாள் சீட்டு, கிழமைச் சீட்டு என்று தத்தமக்கான சேமிப்புக்களிலும் நாட்டஞ் செலுத்தி வருகின்றார்கள்.

உள்ளூர் உணவுத் தயாரிப்புத் தொழிற்துறையில் குடும்ப உறுப்பினர்களின், உறவினர்களின், அயலவர்களின் கூட்டுழைப்புக்கான வாய்ப்புக்கள் அதிகரித்துக் காணப்படுகின்றன. நவீனமயமானது என்ற பெயரில் தாராளவாத பொருளாதார முறைமை ஏற்படுத்தி வரும் பாதகமான குடும்பச் சிதைவுகளின் பின்புலத்தில் அதாவது குடும்ப அங்கத்தவர்களிடேயே இடைவெளிகளை அதிகரித்து பெண்களின் உழைப்பு வீதத்தை இரட்டிப்பாக்கியுள்ள சூழலில் குடும்பத்தில் தாய், தந்தை, பிள்ளைகள் எனப்பலரும் இந்த உணவுத் தயாரிப்புக்களில் பங்கெடுப்பதற்கான வாய்ப்புக்களை உருவாக்குவதால் குடும்பங்களில் பெண்களின் உழைப்புச் சக்தியை அனுபவபூர்வமாக விளங்கிக் கொண்டு ஆண்பிள்ளைகள் பெண்களின் உழைப்பில் தாமும் பங்காளர்களாகச் செயலாற்றி ஆக்கபூர்வமாக வாழ்வதற்கும் வளர் வதற்குமான சாதகமாக இது இருந்து வருகின்றது.

இந்த அம்மாக்களின் சமையல் தொழிற்துறையூடாக உள்ளூர்ப் பொருளாதாரம் சமூகமயப்படும் தன்மை அதிகரிப்பதனைக் காண முடிகின்றது உதாரணமாக ஊரில் உணவு தயாரித்துக் கொடுக்கும் அம்மா ஒருவரிடம் உணவுக்கான கேள்விகள் அதிகரிக்கும் போது அத்தகைய கேள்விகளைத் தன்னைச் சார்ந்த தொழில் முயற்சியாளர்களுடன் பகிர்ந்து கொள்ளும் நிலைமை சாத்தியமாகின்றது. அதாவது இரண்டாயிரம் இடியப்பங்களுக்கான கேள்வி வரும் போது அதனைப் பலரும் பகிர்ந்து கொள்ளும் சமூகப் பொருளாதாரப் பண்பாடு இதில் வலுவடைந்து வருகின்றது.

இதனால் இன்றைய பொருளாதார நெருக்கடிச் சூழலில் இத்தகைய அம்மாக்களின் உள்ளூர் உணவுத் தயாரிப்புத் தொழிற்துறை தேசிய பொருளாதாரத்தை நுண்ணிய அளவில் வலுப்படுத்தும் சமூகப் பொருளாதார முறைமையாக விளங்கி வருகின்றது.

இவ்வாறு உள்ளூர்த் தொழிற்துறையாக விளங்கி வரும் அம்மாக்களின் சமையல் முறையில் பெண்கள் இரட்டைப் பொருளாதாரச் சுமையுடன் செயலாற்றி வருவது கவனிக்க வேண்டியதாக இருக்கின்றது. அதாவது இந்த உணவுத்தயாரிப்புக்களில் ஈடுபடும் அதேவேளை தத்தமது குடும்பத்திற்கான நாளாந்த வீட்டு வேலைகளையும் குறிப்பாக சமையல் வேலைகளையும் மேற்கொள்பவர்களாக இத்தகைய தொழிற்துறைகளில் பங்குபற்றும் பெண்கள் காணப்படுகின்றனர். இதனால் அவர்களின் உழைப்பு நேரம் அதிகமாக இருந்து வருகின்றது. ஆனால் இந்த உழைப்புக்கான பெறுமதி கணிப்பிடப்படாததாகவே இருக்கிறது. இந்த இரட்டை உழைப்பின் பெறுமதி ஒவ்வொருவரினாலும் புரிந்து கொள்ளப்பட்டு அதற்கான முக்கியத்துவமும்



பெறுமதியும் வழங்கப்பட வேண்டியது தேவையாக இருக்கின்றது.

இந்தப் பொருளாதாரப் பணியில் பங்கெடுத்து வரும் உள்ளூர்த் தொழில் முயற்சியாளர்களான பெண்களை மென்மேலும் வலுப்படுத்தும் நடவடிக்கைகளில் ஈடுபட வேண்டியது தேசியப் பொருளாதார வளர்ச்சி குறித்து அக்கறைப்படும் ஒவ்வொருவரினதும் கடமையாகின்றது. எனவே முழுக்க முழுக்க பெண்களின் முயற்சிகளூடாக இயக்கம்பெற்று வரும் அம்மாக்களின் சமையல் முறைமை உள்ளூர்த் தொழிற் துறையாக உத்தியோகபூர்வமாக அங்கீகரிக்கப்பட வேண்டியது காலத்தின் தேவையாக உள்ளது. இத்தோடு இந்தத் தொழிற்துறைக்கு எந்த விதத்திலும் பாதிப்புக்கள், தடங்கல்கள் ஏற்படாதவாறு இலகுபடுத்தல்களை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டியது நம் ஒவ்வொருவரினதும் பொறுப்பும், கடமையுமாகின்றது.



**மின்மடல் :** tamilseconomy@gmail.com
**தொலைபேசி :** 0777 276 949

# விடுவிக்கப்பட்ட காணியும் பொருண்மியத் திட்டமும்?

இராணுவத்தின் கட்டுப்பாட்டில் கடந்த சுமார் மூன்று தசாப்த காலமாக இருந்த வலிகாமம் வடக்கிலுள்ள 180 ஏக்கர் காணி கடந்த வாரம் விடுவிக்கப்பட்டிருக்கின்றது. போரின் போது மக்களை இரவோடிரவாக துரத்திய படையினர் இப்போது பெரும் ஆரவாரங்களுடன் இந்தக் காணிகளை விடுவித்து அதனை அரசியலாக்கியிருக்கின்றார்கள். படையினரால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள காணிகள் இதனைவிட சுமார் இருபது மடங்கு இருக்கின்ற போதிலும், ஒரு சிறிய நிலப்பகுதிதான் இப்போது விடுவிக்கப்பட்டிருக்கின்றது.

சுமார் 30– 35 வருடங்களுக்குப் பின்னர் தமது காணிகள் மீளக்கிடைத்திருப்பதில் அந்தப் பகுதி மக்கள் மகிழ்ச்சியடைந்திருக்கின்றார்கள். ஒரு தலைமுறைக்கும் அதிகமான காலத்தை முகாம்களிலும், உறவினர் இல்லங்களிலும் வாழ வேண்டிய நிர்ப்பந்தம் அவர்களுக்கு எந்தளவுக்கு நெருக்கடியைக் கொடுத்திருக்கும் என்பது புரிந்துகொள்ளக்கூடியதுதான். அதனால், பெரும்பாலானவர்கள் மீளக்குடியமர்வதில் அவசரம் காட்டுவதையும் அவதானிக்க முடிகின்றது. அரசாங்கத்தைப் பொறுத்தவரையில், காணிகளை விடுவிப்பதன் மூலமாக தனக்கு முன்னாலுள்ள நெருக்கடியைக் குறைக்க முயல்கின்றதே தவிர, அந்தப் பகுதி மீள்குடியேற்றம் மீள்கட்டுமானம் குறித்த திட்டங்கள் எதுவும் அதனிடம் இல்லை.

வலிகாமம் வடக்கின் பொருளாதார ரீதியான முக்கியத்துவம் குறைத்து மதிப்பிடக்கூடியதொன்றல்ல. விவசாயத்துக்கு மிகவும் வளமான நிலத்தைக்கொண்டுள்ள பகுதி அது. மயிலிட்டியும் அதனையடுத்துள்ள பகுதிகளும் மீன்பிடிக்கு மிகவும் பிரசித்தமானவை. இலங்கையிலேயே சிறந்த மீன்பிடித்துறைகளில் ஒன்றாகக் கருதப்படும் பகுதிதான் அது. அதனைவிட விமான நிலையம், துறைமுகம் என்பனவும் இந்தப் பகுதியில்தான் அமைந்திருக்கின்றன. ஆக, இது வர்த்தக ரீதியாகவும், பொருளாதார ரீதியாகவும் தமிழர்களுக்கு முக்கியமான பகுதிகள்.

காங்கேசன்துறையிலிருந்து விரைவில் தமிழகத்துக்கான கப்பல் சேவை ஆரம்பிக்கப்போவதாக வந்திருக்கும் செய்திகள் இதன் முக்கியத்துவத்தை மேலும் அதிகரிக்கின்றன. வடக்கிலிருந்து உள்ளூர் உற்பத்திப் பொருட்கள் சிலவற்றை இந்தியாவுக்கு ஏற்றுமதி செய்வதற்கான வாய்ப்புக்கள் இதன்மூலமாக ஏற்பட்டிருப்பதாக வர்த்தகத் துறையினர் எதிர்பார்க்கின்றார்கள். இது தொடர்பில் தமிழர் பொருண்மியம் கடந்த வாரம் விசேடமாகக் கவனம் செலுத்தியிருந்தது. இந்த நிலையில், வலிகாமம் பகுதியில் விடுவிக்கப்பட்ட காணிகளில் எவ்வாறான பொருளாதார நடவடிக்கைகளை முன்னெடுக்க முடியும் என்பது தொடர்பாக ஆராய வேண்டியது அவசியம்.

அரசாங்கத்தைப் பொறுத்தவரையில் தமிழர் பகுதிகளைப் பொருளாதார ரீதியாக உயர்த்தக்கூடிய திட்டங்களில் தமது கவனத்தைச் செலுத்தும் என்பது எதிர்பார்க்கக்கூடியதல்ல. இதில் தமிழர்கள்தான் அக்கறை செலுத்த வேண்டும். அரசியல் தீர்வு வரட்டும் எனக் காத்துக்கொண்டிருப்பதில் அர்த்தமில்லை. எம்மைப் பலப்படுத்தும் வகையில் எமக்கான பொருளாதாரம் ஒன்றை கட்டியெழுப்புவதற்கு என்ன செய்ய முடியும் என்பதையிட்டு புலம்பெயர்ந்த – தாயகத்தில் உள்ள முதலீட்டாளர்கள், இத்துறையில் நிபுணத்துவம் பெற்றவர்கள் ஆராய்ந்து அதற்கான செயற்பாடுகளை விரைந்து முன்னெடுக்க வேண்டும்.

# அன்புள்ள ஆசிரியருக்கு....




## வடக்கின் சுற்றுலா தளம்

தமிழர் பொருண்மியம் கடந்த வார இதழில் வெளிவந்த நெய்தல் நகர் குறித்த கட்டுரையைப் படித்த போது ஆச்சரியமாக இருந்தது. வடக்கில் இவ்வாறான ஒரு சுற்றுலா தளம் இருப்பதை அறிந்து மகிழ்ந்தோம். விரைவில் அங்கு செல்வதற்கும் ஆர்வமாக இருக்கின்றோம். இது போல வடக்கு, கிழக்கில் இருக்கக்கூடிய இடங்களையிட்டு தமிழர் பொருண்மியம் தொடர்ந்தும் தகவல்களை வெளிக்கொண்டுவர வேண்டும் என்று எதிர்பார்க்கின்றோம்.

**எம்.சந்திரபிரகாஷ், பளை.**

## கப்பல் போக்குவரத்து

கடந்தவார தமிழர் பொருண்மியம் வார இதழைப் படித்தோம். அறிவுபூர்வமான பல கட்டுரைகளைத் தந்திருந்தீர்கள். இலங்கையின் பொருளாதார நெருக்கடி குறித்து பங்களாதேஷ் பொருளாதார நிபுணரின் பேட்டி சிறப்பாக இருந்தது. அறிவுரீதியான பல தகவல்களை அவர் சொல்லியிருக்கின்றார். இன்றைய பிரச்சினைக்கு காரணம் என்ன என்பது அதனைப் படித்த போது புரிந்துகொள்ள முடிந்தது.

அதேபோல யாழ்ப்பாணத்திலிருந்து ஆரம்பிக்கப்படவிருக்கும் கப்பல் சேவை குறித்த ஆய்வுக் கட்டுரையும் சிறப்பானதாக இருந்தது. வடபகுதி மக்களின் பொருளாதார வளர்ச்சியில் இந்த கப்பல் சேவை முக்கியமான பங்களிப்பை வழங்கும் என நாங்களும் எதிர்பார்க்கின்றோம்.

**பா.தங்கத்துரை. உரும்பிராய்.**

**தமிழர் பொருண்மியம் உங்கள் வீடு தேடி வர ...**

சந்தா தாரராகுங்கள்!

* **மூன்று மாதங்களுக்கு 1,300 ரூபா தபால் செலவு உட்பட**
* **ஆறு மாதங்களுக்கு 2,600 ரூபா தபால் செலவு உட்பட**

சந்தா தொகையை **Green media House Pvt Ltd** என்ற பெயரில், **HNB Bank - Jaffna Metro branch - 016010023281** கணக்கு இலக்கத்துக்கு செலுத்தி, அதற்கான பிரதியுடன் கீழேயுள்ள படிவத்தையும் நிரப்பி வாட்ஸ்அப் மூலமாகவோ தபால் மூலமாகவோ அனுப்பி வையுங்கள்.

மறு வாரத்திலிருந்து தமிழர் பொருண்மியம் உங்கள் வீடு தேடி வரும்!

அனுப்பிவைக்க வேண்டிய முகவரி -

**Green media House Pvt Ltd,**
**68 crossette lane, Jaffna.**

**வாட்ஸ் அப், வைபர் இலக்கங்கள் - 0777 276 949**

------------------------------------------------------------

**தமிழர் பொருண்மியம் - சந்தாப் படிவம்**

**பெயர் -** ---------------------------------------------------
**முகவரி -** ---------------------------------------------------
**தொலைபேசி இலக்கம் -** ------------------------------------
**சந்தாக் காலம் -** ---------------------------------------------
**செலுத்திய தொகை -** ------------------------------------------
**செலுத்திய திகதி -** ------------------------------------------




**இலங்கையில் 22 கரட் (ஒரு பவுண்) தங்கத்தின் நேற்றைய சந்தை விலை 1,76,400 ரூபா.**

**24 கரட் தங்கம் 1,92,350 ரூபாவுக்கு நேற்றைய தினம் விற்பனை செய்யப்பட்டது.**




**கேள்வி** - கிளிநொச்சியில் உள்ள பொஸிபிள் கிரீன் என்ற நிறுவனம் தொடர்பாக கட்டுரை ஒன்றை இரு வாரங்களுக்கு முன்னர் வெளியிட்டிருந்தீர்கள். அதிலுள்ள சில பொருட்கள் தேவையாகவுள்ளது. ஆதனை கூரியர் மூலமாகப் பெற்றுக்கொள்ள முடியுமா?

**பதில்** - ஆம். இதனையிட்டு சம்பந்தப்பட்டவர்களிடம் விசாரித்தோம். கூரியர் மூலமாக துரிதமாக அனுப்பிவைப்பதற்கான ஏற்பாடுகளை அவர்கள் செய்திருக்கின்றார்கள். அது தொடர்பாக நீங்கள் அவர்களிடமே நேரில் தெரிந்து கொள்ள முடியும். 077 292 1958 என்ற எண்ணில் தொடர்புகொள்ளுங்கள்.

**எம்.தர்மசேகரம்,**
**நல்லூர், யாழ்ப்பாணம்**

**கேள்வி** - நாட்டின் தற்போதைய பொருளாதார நிலை காரணமாக பெருமளவு இளைஞர்கள் வேலைவாய்ப்பைத் தேடி வெளிநாடுகளுக்குச் செல்கின்றார்கள். இது நாட்டுக்கு நல்லதா?

**பதில்** - வெளிநாடுகளுக்குச் செல்பவர்கள் பணத்தை நாட்டுக்கு அனுப்பினால், நாம் எதிர்கொண்டிருக்கும் அந்நியச் செலாவணி பிரச்சினையை ஓரளவுக்குத் தீர்க்க முடியும். ஆனால், பணத்தை அனுப்புபவர்கள் பெரும்பாலும் அங்கீகரிக்கப்பட்ட வங்கிகள் மூலமாக அனுப்பாமல், உண்டியல் மூலமாகவே அனுப்புவதாக ஒரு தகவல் உள்ளது. இதனால், அரசாங்கம் எதிர்பார்க்கும் அந்நியச் செலாவணி அதிகளவுக்கு கிடைக்காமல் போகலாம். அதனைவிட, இவ்வாறு வெளிநாடுகளுக்கு சென்றவர்கள் தமது குடும்பத்தினரையும் அங்கு அழைத்துக்கொண்டால் தொடர்ந்து பணம் அனுப்புவதை நிறுத்திவருவார்கள். இது முதலாவது பிரச்சினை.

இரண்டாவதாக இளைஞர்கள் பெருமளவுக்கு இவ்வாறு வெளிநாடு சென்றால், நாட்டில் அறிவு ஜீவிகளின் தொகை குறைந்துவிடும். தொழில்நுட்பம் உட்பட பல்வேறு துறைகளில் ஆட்கள் இல்லாத நிலை ஏற்படலாம்.

**என்.மலரன்பன்**
**கந்தர்மடம், யாழ்ப்பாணம்.**

**கேள்வி** - எங்கள் வீட்டின் கோமாதாவிற்கு வாயில் புண் வந்திருக்கிறது தயவு செய்து தகுந்த மருத்துவம் ஏதாவது சொல்ல முடியுமா?

**பதில்** - ஆம் நிச்சயமாக.... ஒவ்வொரு வீட்டிலும் கோமாதாவைத் தமது குழந்தையைப் போல் வளர்ப்பார்கள், அவளின் வாய்ப்புண் என்கிற கோமாரி நோய்க்கான இயற்கை மருத்துவம் இதோ...

**எம்.இரத்தினவேல்,**
**முல்லைத்தீவு**







| | |
|---|---|
| கத்தரிக்காய் | - 180/= |
| உருளைக்கிழங்கு | - 140/= |
| பச்சைமிளகாய் | - 200/= |
| தக்காளி | -300/= |
| மரவள்ளிக்கிழங்கு | - 200/= |
| கோவா | - 80/= |
| கரட் | - 150/= |
| பூசணி | - 80/= |
| புடோல் | - 150/= |
| வாழைக்காய் | - 200/= |
| சின்ன வெங்காயம் | - 350/= |
| பெரிய வெங்காயம் | - 160/= |
| பாகற்காய் | - 250/= |
| வெண்டக்காய் | - 250/= |
| கருணைக்கிழங்கு | - 120/= |
| பயற்றங்காய் | - 600/= |
| லீக்ஸ் | - 300/= |
| பீற்றூட் | - 100/= |
| கறிமிளகாய் | - 700/= |
| முருங்கைக்காய் | - 1800/= |
| போஞ்சி | - 300/= |




**வாங்கும் விலை**

| | |
|---|---|
| அவுஸ்திரேலியன் டொலர் - | 248/= |
| கனடா டொலர் - | 265/= |
| சீன யுவான் - | 52/= |
| யுரோ - | 378/= |
| ஜப்பான் யென் - | 2.7/= |
| சிங்கப்பூர்டொலர் - | 269/= |
| ஸ்ரோலிங் பவுண் - | 432/= |
| சுவிஸ் பிராங் - | 387/= |
| அமெரிக்க டொலர் - | 359/= |

**விற்கும் விலை**

| | |
|---|---|
| ஆஸ்திரேலியன் டொலர் - | 259/= |
| கனடா டொலர் - | 277/= |
| சீன யுவான் - | 55/= |
| யுரோ - | 399/= |
| ஜப்பான் யென் - | 2.8/= |
| சிங்கப்பூர் டொலர் | 260/= |
| ஸ்ரோலிங் பவுண் - | 449/= |
| சுவிஸ் பிராங் - | 405/= |
| அமெரிக்க டொலா - | 370/= |




பி.பார்த்தீபன்

# புலம்பெயர்ந்த தமிழர் இலங்கையில் முதலீடு செய்ய முன் வருவார்களா?



எப்போதுமில்லாத பொருளாதார நெருக்கடிக்கு நாடு முகங்கொடுத்துக் கொடுத்துக்கொண்டிருக்கும் நிலையில் புலம்பெயர்ந்தவர்கள் முதலீடுகளைக் கொண்டுவரவேண்டும் என அழைப்பு விடுக்கப்பட்டிருக்கின்றது. புலம்பெயர்ந்த மக்கள் என பொதுவாகச் சொன்னாலும், இது புலம்பெயர்ந்த தமிழர்களுக்கு விடுக்கப்பட்ட ஓர் அழைப்புத்தான். ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உட்பட முக்கியமான அமைச்சர்கள் பலரும் இவ்வாறு அழைப்பு விடுக்கின்றார்களே தவிர அதற்கான விசேட ஏற்பாடுகள் எதுவும் செய்யப்படவில்லை.

இலங்கையின் பொருளாதார நெருக்கடிக்குப் பிரதான காரணம் அந்நியச் செலாவணி முற்றாகத் தீர்ந்துவிட்டதுதான். இந்த நெருக்கடியிலிருந்து மீள்வதற்கு பல்வேறு உபாயங்கள் சொல்லப்படுகின்றன. அதிலொன்றுதான் புலம்பெயர்ந்த தமிழர்கள் முதலீடுகளைக் கொண்டுவர வேண்டும் என்பது. பெற்ற கடன்களை மீளச்செலுத்த முடியாது என அறிவித்தமை மற்றும் கடன் மறுசீரமைப்புக்காக தற்போது நடைபெறும் பேச்சுக்கள் என்பன இந்தப் பொருளாதார நெருக்கடிக்கு இந்த நெருக்கடிக்கு தற்காலிகமான தீர்வுகளைத் தந்தாலும், அதிகளவு முதலீடுகளும், அந்நியச் செலாவணியை அதிகளவுக்குப் பெற்றுக்கொள்வதற்கான திட்டங்களும்தான் இந்தப் பிரச்சினைக்கு நிரந்தரமான தீர்வைக்கொண்டுவரும்.

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ கடந்த வருடம் சுதந்திர தினத்தன்று நிகழ்த்திய உரையில், “புலம்பெயர்ந்த மக்கள் தமது சேமிப்புக்களை இலங்கையில் முதலீடு செய்ய வேண்டும்“ என அழைப்பு விடுத்திருந்தார். இதேபோன்ற ஒரு கருத்தை பின்னர் ஜனாதிபதியாகப் பொறுப்பேற்ற ரணில் விக்கிரமசிங்கவும் தன்னுடைய உரை ஒன்றின் போது வெளிப்படுத்தியிருந்தார். “நாடு தற்போது எதிர்கொண்டிருக்கும் பிரச்சினையை சமாளிப்பதற்குப் புலம்பெயர்ந்தவர்கள் கொண்டுவரக்கூடிய டொலர் முக்கியமான ஒரு வளமாக இருக்கும்“ எனவும் ஜனாதிபதி தெரிவித்திருந்தார்.

இவர்கள் இருவரும் தெரிவித்த இந்தக் கருத்துக்கள் உண்மையானவை என்பதில் மாற்றுக்கருத்து இல்லை. உலகம் முழுவதிலும் பரந்துவாழும் தமிழர்கள் பெருமளவு செல்வத்துடன் உள்ளார்கள் என்பது உண்மை. அவர்களுடைய முதலீடுகள் இலங்கைக்கு வருமாக இருந்தால் நாடு தற்போது எதிர்கொண்டுள்ள டொலர் பிரச்சினைக்கு கணிசமான தீர்வைக் காணலாம் என்பதும் உண்மை. ஆனால், அந்த முதலீடுகள் தொடர்பில் தெளிவான கொள்கைத் திட்டம் ஒன்றை வெளியிடாமல், அது தொடர்பில் புலம்பெயர்ந்த மக்களுடன் வெளிப்படையாகப் பேசாமல் வெறுமனே அறிக்கைகளை வெளியிடுவது பலனைத் தரப்போவதில்லை.

கடந்த ஒரு வருடகாலமாக இதற்கான கோரிக்கைகள் அதிகமாக முன்வைக்கப்பட்டு வருகின்றது. புலம்பெயர்ந்த தமிழ்த் தொழில் முனைவோர் பலர் நாட்டுக்கு வந்து பேச்சுக்களை நடத்திவிட்டுச் சென்றிருக்கின்றார்கள். ஆனால், அவர்களிடமிருந்து பெரியளவிலான முதலீட்டுக்கான திட்டங்கள் எதுவும் கிடைத்திருப்பதாக எந்தத் தகவலும் இல்லை. இலங்கையில் காணப்படும் ஸ்திரமற்ற நிலையும், இனவாத அரசியலும் அவர்களைத் தொடர்ந்தும் அச்சுறுத்துவதாகவே தெரிகின்றது.

எரிபொருட்களையும், எரிவாயுவையும், அவசியமான மருந்துப் பொருட்களையும் கொள்வனவு செய்வதற்கு இந்தியா உட்பட சில நாடுகள் கடன்களைக் கொடுத்திருந்தன. அதற்காகப் பெறப்பட்ட கடன்களும் பெருமளவுக்கு முடிவுக்கு வரப்போகின்றது. உலக வங்கியும், சர்வதேச நாயண நிதியமும் வழங்கக்கூடிய கடன்கள் கிடைப்பதற்குத் தொடர்ந்தும் காத்திருக்க வேண்டியுள்ளது. சீனாவின் கடன்மறுசீரமைப்பு தொடர்பான சர்ச்சை தொடர்ந்து கொண்டிருக்கின்றது.

அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகள் உக்ரைனில் பெருமளவு நிதியை வாரியிறைத்துக்கொண்டிருக்கின்றன. உக்ரைன் போரின் விளைவுகளால் அந்த நாடுகளின் பொருளாதாரமும் தாக்கப்பட்டிருக்கின்றது. இதனால், இலங்கைக்கு நிதியை வழங்குவதற்கு அந்த நாடுகளின் கஜானாவிலும் டொலர் இல்லை. உலக வங்கியும், சர்வதேச நாணய நிதியமும்

பொருளாதார நெருக்கடியிலிருந்து மீள்வதற்கு இலங்கையின் திட்ட வரைபடத்தைக் கேட்கின்றன. இலங்கையின் அரசியல் ஸ்திரத் தன்மையையும் அவை எதிர்பார்க்கின்றன. இந்த இரண்டும் இங்கில்லை.

இந்த நிலையில் புலம்பெயர்ந்த மக்களை நோக்கி அரசாங்கம் திரும்புவது தவிர்க்க முடியாததுதான். புலம்பெயர்ந்த மக்களிடமிருந்து இரண்டு விதமான பணவரவு அரசாங்கம் எதிர்பார்க்கின்றது.

ஒன்று - தமது குடும்பத்தினர் உறவினர்களுக்கு மாதாந்தம் அவர்கள் அனுப்பும் பணம் அங்கீகரிக்கப்பட்ட வங்கிகள் மூலமாக அனுப்பப்பட வேண்டும். இதன் மூலமாகவே உடனடியாக அந்நியச் செலாவணியைப் பெற்றுக்கொள்ள முடியும். அதற்கான சில ஊக்குவிப்புக்களை அரசாங்கம் செயற்படுத்தியபோதிலும், இன்றும் “உண்டியல்“ மூலமாகவே பெருமளவு பணம் வருகிறது. அவ்வாறு அனுப்புவதுதான் பாதுகாப்பானது என புலம்பெயர்ந்த தமிழர்கள் மட்டுமன்றி, சிங்களவர்கள் கூட கருதும் நிலை உள்ளது. இவ்விடயத்தில் நம்பிக்கையைக் கட்டியெழுப்ப அரசாங்கம் தவறிவிட்டது.

கோட்டாபய வெளியேறி ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியாகப் பொறுப்பேற்றபோது, அதிகாரபூர்வ வங்கிகள் மூலமாக பணத்தை அனுப்புவதற்கு பலா் விரும்பியிருந்தார்கள். அவ்வாறு பெருமளவு பணம் அனுப்பப்பட்டதாகவும் தகவல் உள்ளது. ஆனால், இந்த நிலை தொடரவில்லை என்பது இப்போது தெரியவந்திருக்கின்றது. நாட்டின் அரசியல் ஸ்திரமற்றதாக இருப்பது அதற்குக் காரணமாக இருக்கலாம்.

புலம்பெயர்ந்தவர்களிடமிருந்து கிடைக்கக் கூடிய பணத்தில் இரண்டாவதாக விளக்குவது முதலீடுகளாகும். ரணில் விக்கிரமசிங்க கடந்த வருட நடுப்பகுதியில் பிரதமராகப் பதவியேற்ற போதே நேரடியான முதலீடுகள் தொடர்பிலான நம்பிக்கை பல்வேறு மட்டங்களிலும் துளிர்விட்டிருந்தது. ஆனால், அவ்விடயத்தில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் எதனையும் இன்று வரையில் காணமுடியவில்லை. அவா் பின்னா் ஜனாதிபதியானபோது இந்த நம்பிக்கை அதிகரித்தது. ஆனால், உறுதியான அரசியல் தீர்வு ஒன்றை முன்வைப்பதில் அவரிடம் காணப்படும் தடுமாற்றம் புலம்பெயா்ந்த தமிழா்களின் நம்பிக்கையையும் குலைத் திருப்பதாகத்தான் தெரிகின்றது.

வெளிநாட்டு முதலீடுகள் அதிகளவுக்கு - அல்லது எதிா்பாா்த்தளவுக்கு வராமைக்கு என்ன காரணம் எனப் பொருளாதார நிபுணர் ஒருவரிடம் கேட்டபோது முக்கியமான பிரச்சினைகளை அவர் கூட்டிக்காட்டினார். “முதலீடு செய்ய வருபவர்கள் பல விடயங்களில் கவனம் செலுத்துவார்கள். ஒன்று - எங்கு சென்று முதலீடு செய்தால் அதிகளவு இலாபம் வரும் என்பதைப் பார்ப்பார்கள். இரண்டாவது முதலீட்டுக்கான பாதுகாப்பை - உத்தரவாதத்தை எதிர்பார்ப்பார்கள். மூன்றாவது தொழிலாளர்களின் வேலை ஒழுக்கம் என்பதை எதிர்பார்ப்பார்கள். இதனைவிட முதலீடு செய்வதற்கான நடைமுறைகள் வெளிப்படைத்தன்மையாக இருக்க வேண்டும் - அதாவது கையூட்டுக்கள், கொமிசன்கள் இல்லாத நிலையை அவர்கள் எதிர்பார்ப்பார்கள். இது எதுவுமே இல்லாத நிலையில் இலங்கையில் முதலீடு செய்ய அவர்கள் எவ்வாறு முன்வருவார்கள்” என அவர் கேள்வி எழுப்புகின்றார்.

> *புலம்பெயர்ந்தவர்களின் முதலீடுகள் இலங்கைக்கு வருமாக இருந்தால் நாடு தற்போது எதிர்கொண்டுள்ள டொலர் பிரச்சினைக்குக் கணிசமான தீர்வைக் காணலாம் என்பது உண்மை. ஆனால், அந்த முதலீடுகள் தொடர்பில் தெளிவான கொள்கைத் திட்டம் ஒன்றை வெளியிடாமல், அது தொடர்பில் புலம்பெயர்ந்த மக்களுடன் வெளிப்படையாகப் பேசாமல் வெறுமனே அறிக்கைகளை வெளியிடுவது எந்தளவுக்கு பலனைத் தருவதாக அமையும்?*

இதனைவிட அரசியல் ஸ்திரத் தன்மையும், வெளிப்படைத்தன்மையும் உள்ள மற்றொரு நாட்டை அவர்கள் தேடிப்போவார்கள் என அவர் சுட்டிக்காட்டுகின்றார். அதுதான் நடந்துகொண்டும் இருக்கின்றது. அதாவது வெளிநாட்டு முதலீட்டாளா்களைக் கவரக்கூடிய் அவா்களுடைய முதலீட்டுக்குப் பாதுகாப்பைத் தரக்கூடிய நிலையில் இலங்கை இல்லை என்பதுதான் அவரது கருத்து.

“ஆனால், புலம்பெயர்ந்த மக்கள் முதலீடுகளை மேற்கொள்ள முன்வரும்போது, இது எமது நாடு- இதனைக் கட்டியெழுப்புதில் எனக்கும் பங்குண்டு என்ற நம்பிக்கையுடன் முதலீடுகளை மேற்கொள்ள முன்வரலாம்“ எனக் குறிப்பிடுகின்றார் பொருளாதார ஆலோசகரும் சமூக செயற்பாட்டாளருமான செல்வின். “குறைந்தளவு இலாபம் கிடைத்தாலும், முதலீடுகளுக்குப் பாதுகாப்பு இருந்தால் போதும் என அவர்கள் கருதலாம். குறைந்தளவு இலாப நோக்கத்தையும், அதிகளவு சமூக நோக்கத்தையும் கொண்டதாக இந்த முதலீடுகள் இருக்கும்” எனத் தெரிவிக்கும் செல்வின் மற்றொரு விடயத்தையும் முக்கியமாக சுட்டிக்காட்டுகின்றார்.

“புலம்பெயர்ந்த தமிழர் தமது தாயகம் எனக் கரும் வடக்கு கிழக்குப் பகுதியில்தான் முதலீடுகளைச் செய்வதற்கு விரும்புவார்கள். இதற்கான சிறப்பு பாதை ஒன்றை அரசாங்கம் உருவாக்க வேண்டும். இதுவரையில் அரசாங்கம் அது குறித்து பேசவில்லை. வடக்கு கிழக்கை தனியான பொருளாதார வலையமாக உருவாக்கி - அதற்கான சிறப்பு செயலணி ஒன்றை உருவாக்கி, அந்தச் செயலணி துரிதமாகவும், வெளிப்படைத் தன்மையுடனும் செயற்படக்கூடிய ஒன்றாகவும் இருந்தால், புலம்பெயர்ந்த தமிழ் மக்கள் இது குறித்து சிந்திப்பார்கள்“ என்பது அவரது கருத்து. ஆனால், அவ்வாறான நிலை இங்கில்லை.

அவ்வாறான நிலை ஒன்றை உருவாக்கினால், அது சிங்கள மக்கள் மத்தியில் எவ்வாறான கருத்துக்களை உருவாக்கும் என்பது குறித்த அச்சம் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு இருக்கலாம்.

கடந்த காலங்களில் - குறிப்பாக “நல்லாட்சி“(?) காலத்தில் நம்பிக்கையுடன் பெருமளவு முதலீடுகளைச் செய்வதற்காக வந்த புலம்பெயர்ந்த தமிழ்த் தொழில் முனைவோர் பலர் ஏமாற்றத்துடன்தான் திரும்பிச் சென்றார்கள். அவர்களுடன் கொமிசன் எவ்வளவு தருவீர்கள்? என்பது குறித்துத்தான் முக்கியமாகப் பேசப்பட்டது. அதனால் அவர்கள் விரக்தியுடன் திரும்பியது வரலாறு. அவ்வாறு திரும்பிச்சென்ற பலர் பின்னர் ஆபிரிக்க நாடுகள் பலவற்றில் கூட பாரிய பண்ணைகளில் முதலீடுகளைச் செய்திருக்கின்றார்கள் என்பதும் சுட்டிக் காட்டப்பட்டது.

ஆக, புலம்பெயர்ந்த தமிழர்களை நோக்கி அழைப்பு விடும்போது அரசாங்கம் செய்ய வேண்டிய பணிகள் பல உள்ளன. அவை எதனையும் செய்யமுடியாத நிலையில் அரசாங்கம் இருப்பதாயின் பின்னா் எதற்காக அழைப்பு விடுக்க வேண்டும்?

இவை தொடர்பாக அரசாங்கத்துக்கு அழுத்தம் கொடுக்க வேண்டிய பொறுப்பு தமிழ்த் தரப்பினருக்குள்ளது. இதனைச் செய்தால் நீண்டகால அடிப்படையில் இந்தப் பொருளாதாரப் பிரச்சினையை எதிர்கொள்வதற்குப் பெருமளவு பங்களிப்பை புலம்பெயர்ந்த தமிழர்களின் முதலீடுகள் வழங்கும் என்பதில் சந்தேகவில்லை. ஆனால், ஒரு நீண்டகாலத் திட்டத்தின் அடிப்படையில் அதனை அரசாங்கம் முன்னெடுக்குமா?

*

# இரசாயனக் கலப்பற்றவை என்பதால் எமது உற்பத்திகளை மக்கள் விரும்பி வாங்குகிறார்கள்



நேர்கண்டவர் - ஞா.கவினி

**Good life நிறுவன நிறுவனர் ஜெயகாந்தி ஜனா**

“என்னிடம் தற்போது 13 வகையான உற்பத்தி பொருட்கள் இருக்கின்றன. அவை அனைத்துமே இரசாயனக் கலப்பு அற்றவை. இன்னும் உற்பத்தி பொருட்களை அதிகரிக்கும் நோக்கில் இருக்கிறேன். ஏனெனில் எங்களிடம் தாராளமாக இயற்கை வளங்கள் உள்ளன அவற்றைப் பயன்படுத்தி பெறுமதி சேர்த்து விற்பனை செய்வது நல்லது என்று நினைக்கிறேன். பாதுகாப்பிற்காக எந்த இரசாயன கலவைகளும் இடப்படாததால் எனது உற்பத்தியை மக்கள் மிகவும் விரும்பிப் கொள்வனவு செய்கின்றனர்.”

இவ்வாறு கூறுகின்றார் Good life நிறுவனத்தின் நிறுவனர் திருமதி ஜெயகாந்தன் ஜனா. தமிழர் பொருண்மியம் வார இதழுக்கு வழங்கிய நேர்காணலில் இதனை அவர் தெரிவித்தார். அவரது நேர்காணலின் விபரம் வருமாறு

**கேள்வி -** Good life என்ற இந்த நிறுவனத்தை நீங்கள் என்ன நோக்கத்துக்காக உருவாக்கினீர்கள்?

**பதில் -** சிறுவயதில் இருந்தே எனது சொந்தக் காலில் நிற்க வேண்டும் என்ற விருப்பம் தான் எனக்கு இருந்தது மற்றவர்களது கட்டளைகளுக்கு ஏற்ப வேலை செய்வதை விடுத்து சுயமாக செயல்பட வேண்டும் என்ற அவா எனக்குள் எப்போதும் இருந்தது. அந்த விருப்பம் தான் என்னை ஒரு தொழில் முயற்சியாளராக மாற்றியது.

**கேள்வி -** உங்களது நோக்கத்தில் நீங்கள் எந்த அளவிற்கு வெற்றி அடைந்திருப்பதாக எண்ணுகிறீர்கள்?

**பதில் -** எதிர்வரும் பத்து வருடங்களில் இலங்கையில் முன்னணி வகிக்கும் நிறுவனங்களில் ஒன்றாக குட் லைவ் நிறுவனமும் இருக்க வேண்டும் என்பதே எனது நோக்கம். உண்மையிலேயே உணவு உற்பத்தியை நான் தேர்ந்தெடுத்ததன் காரணம் என்னவென் றால் உணவு என்பது மனிதன் உயிர் வாழ்வதற்கு உறுதுணையாக இருக்கவேண்டுமென்ற நோக்கிலேயே நான் உணவு உற்பத்தியைத் தேர்ந்தெடுத்தேன் என்பதே உண்மையாகும். எனவே தான் எனது உற்பத்திகள் எப்போதும் இரசாயன கலப்பற்றவையாக இருக்க வேண்டும் என்று விரும்பினேன்.

தற்காலப் பகுதியில் மக்களும் ஓரளவுக்கு விழிப்படைந்து இருக்கி றார்கள். ஆகவே நஞ்சற்ற உணவை மக்களுக்கு கொண்டு சேர்க்கும் எனது செயற்பாட்டில் சிறிய அளவேனும் நான் இப்போது வெற்றி கண்டிருக்கி றேன் என்று நம்புகிறேன்.

**கேள்வி -** இந்த நிறுவனத்தை தொடங்குவதற்கான முதலீட்டை நீங் கள் எவ்வாறு பெற்றுக் கொண்டீர்கள் இதற்காக வங்கி கடன்களைப் பெற் றுக் கொள்ள வேண்டிய தேவை உங்களுக்கு ஏற்பட்டதா?

**பதில் -** நான் இந்த தொழிலில் முதல் இட வேண்டியது தேவை இருந்தாலும், நான் முதலில் எனது சொந்த முதலின் மூலம் ஆரம்பித்தேன். அதன் பின் இதனை விரிவுபடுத்த வேண்டிய தேவை வந்தபோது மாற் றுத்திறனாளிகள் அமைப்பான we can அமைப்பின் மூலம் சிறு கடன் தொகையைப் பெற்று க் கொண்டேன்.

வங்கிகளும் எனக்கு உதவி செய்ய தயாராக இருந்தன, ஆனால் நான் மாற்றுத் திறனாளிகள் அமைப்பின் மூலமாக பெற்றுக் கொண்ட கடன் மூலம் எனது தொழிலை விஸ்தீரணம் செய்கிறேன்.

**கேள்வி -** உங்களது நிறுவனத்தில் நீங்கள் எவ்வாறானவர்களுக்கு வேலை வாய்ப்பை வழங்குகிறீர்கள?

**பதில் -** உண்மையில் இந்த தொழிலை நானும் எனது குடும்பத்தாரும் இணைந்து நடத்தி வருகிறோம். இந்த தொழிலின் மூலம் ஒரு பெண்ணிற்கு நிரந்தரமான வருமானத்தை பெற்றுக்கொள்ளக்கூடிய தொழிலை வழங்குகிறேன். மேற்கொண்டு எனது தொழிலை விஸ்திரப்படுத்தி பல ருக்கு தொழில் வாய்ப்பை வழங்க வேண்டும் என்பதே எனது விருப்பமாகும்.

**கேள்வி -** நீங்கள் பலதரப்பட்ட உற்பத்தி பொருட்களைச் செய்து வருகிறீர்கள் அவற்றிற்கான மூலப் பொருட்களை எவ்வாறு கொள்வனவு செய்கிறீர்கள்?

**பதில் -** பெரும்பாலும் எனது கிராமத்தை மற்றும் சுற்றியுள்ள மூலப் பொருட்களைக் கொண்டே எனது பொருட்களைத் தயாரிக்கிறேன். முருங்கை இலை, ஆவாரம் பூ, முடக்கத்தான் போன்று எம்மைச் சூழ உள்ள பொருட்களை உரியவர்களிடம் பெற்றுக் கொள்ளும்போது அவற்றைச் சேகரித்து தருபவர்களுக்கு அது ஒரு வருமானமாகவும் இருக்கிறது.

பெரும்பான்மையான மூலப் பொருட்களை மாற்றுத்திறனாளிகள் அமைப்பைச் சேர்ந்த பெண்கள் எனக்கு வழங்கிக் கொண்டிருக்கிறார்கள்.

**கேள்வி -** உள்ளூரிலே கிடைக்கிற மூலப் பொருட்களை பெற்றுக் கொள்வதில் உங்களுக்கு ஏற்படும் சவால்கள் எவை?

**பதில் -** உண்மையிலேயே மழை காலங்களில் மிகவும் செழிப்பான மூலப்



பொருட்களை எனக்குக் கிடைக்கிறது. ஆனால் அவற்றை உலர்த்தி பத்திரப்படுத்துவதற்கான இயந்திர வசதிகள் பற்றாக்குறையினால் மூலப்பொருட்களை அதிகமாக பத்திரப்படுத்துவதற்கு நான் சிரமப்படுகிறேன்.

ஆனாலும் காலப்போக்கில் எனக்கான தொழில் நுட்ப வசதிகள் அனைத்தையும் நான் கொண்டிருப்பேன் என்று நம்புகிறேன்.

**கேள்வி -** உங்களது உற்பத்தி பொருட்களையும் அவற்றுக்கு இருக்கின்ற வரவேற்பையும் பற்றி சொல்லுங்கள்

**பதில் -** என்னிடம் தற்போது 13 வகையான உற்பத்தி பொருட்கள் இருக்கின்றன. அவைகளில் அனைத்துமே இரசாயனக் கலப்பு அற்றவை.

இன்னும் உற்பத்திப் பொருட்களை அதிகரிக்கும் நோக்கில் இருக்கிறேன். ஏனெனில் எங்களிடம் தாராளமாக இயற்கை வளங்கள் உள்ளன அவற்றை பயன்படுத்தி பெறுமதி சேர்த்து விற்பனை செய்வது நல்லது என்று நினைக்கிறேன்.

எப்போதுமே எனது உற்பத்திக்கான கால வரையறை மூன்று மாதங்களாக தான் இருக்கிறது. ஏனெனில் பாதுகாப்பிற்காக எந்த இரசாயனக் கலவைகளும் இடப்படாததால் எனது உற்பத்தியை மக்கள் மிகவும் விரும்பி கொள்வனவு செய்கின்றனர்.

**கேள்வி -** மக்களிடம் பெரிதும் வரவேற்பை பெற்ற உங்களது உற்பத்திகள் பற்றிச் சொல்லுங்கள்?

**பதில் -** எனது உற்பத்தியில் தானிய கஞ்சிக்கலவையும் மற்றும் சத்துமா கலவையும் பெரிதும் மக்களால் விரும்பி கொள்வனவு செய்யப்படுகின்றன.

ஏனென்றால், இது மிகவும் இலகுவாக சமைக்க கூடிய ஓர் உணவு அத்தோடு மிகவும் ஆரோக்கியமாகவும் சுவையாகவும் இருக்கிறது என்று எனது வாடிக்கையாளர்கள் கூறுகின்றனர்.

**கேள்வி -** மிகவும் பாரம்பரியமான உற்பத்திப் பொருட்களை நீங்கள் தற்போது உற்பத்தி செய்து வருகிறீர்கள். இதற்கான பயிற்சிகளை நீங்கள் எங்கிருந்து பெற்றுக் கொண்டீர்கள்?

**பதில் -** உண்மையில் இதற்கான பயிற்சிகளை நான் எனது அப்பம்மாவிடம் இருந்தே பெற்றுக் கொண்டேன்.

அத்தோடு எனது உற்பத்திகளில் பல வகையானவை நான் எனது சொந்த முயற்சியில் உருவாக்கியவை என்பதில் எப்போதும் எனக்கு பெருமை உண்டு.

மற்றும் மூலிகைகளை பதப்படுத்துவது தொடர்பாக Aika institute என்கின்ற இன்ஸ்டிட் யூட் ஒன்றின் மூலம் பயிற்சியைப் பெற்றுக் கொண்டேன்.

நானும் இந்த சுய தொழில் முயற்சி



தொடர்பான வழுவாளராகப் பணி புரிகின்ற காரணத்தினால் எந்த பயிற்சிகளை எனது பணியாளர்களுக்கும் சரியாக சொல்லிக் கொடுக்க வேண்டும் என்று நினைக்கிறேன்.

**கேள்வி -** உற்பத்தி பொருட்களின் தரத்தை மற்றும் விற்பனையை பேணுவதில் நீங்கள் எதிர்நோக்கும் சவால்கள் எவை?

**பதில் -** தற்போது நாங்கள் அனைவரும் கவர்ச்சிகரமான பொதியிடலை விரும்புகின்றோம். ஆனால் தற்போது சகல விதமான பொதிகளும் மூன்று மடங்காக விலை அதிகரித்திருக்கின்றமை எமது உற்பத்திகளை அழகாக சந்தைப்படுத்துவதற்கு மிகவும் சவாலான ஒரு விடயமாக காணப்படுகின்றது.

**கேள்வி -** உள்நாட்டு வெளிநாட்டுச் சந்தைகளை நம்பியதாகவே உங்களுடைய உற்பத்தி பொருட்களுள் உள்ளன இவ்வாறு சந்தைப்படுத்துவதில் உங்களுக்குள்ள நெருக்கடிகள் என்ன?

**பதில் -** உண்மைதான், வெளிநாட்டில் எனது பொருட்களுக்கான கேள்வி மிகவும் அதிகமாக இருக்கிறது .ஆனால் அதனை வெளிநாட்டிற்கு ஏற்றுமதி செய்வதற்கு தேவையான ஆவணங்களைத் தயார்படுத்துவதில் நாங்கள் சிரமத்தை எதிர்நோக்குகின்றோம்.

ஆகவே தற்போது முகவர் ஊடாக எனது உற்பத்திகளை அனுப்பி வருகிறேன். ஆனால் உரிய வசதிகளோடு நேரடியாக ஏற்றுமதி செய்வதன் மூலம் நாட்டிற்கு டொலரை கொண்டு வர வேண் டும் என்று விரும்புகிறேன்.

**கேள்வி -** உங்களுடைய உற்பத்திகளைப் புலம்பெயர் நாடுகளில் எம்மவர்கள் மட்டும் வாங்குகிறார்களா? அல்லது அந்த நாட்டவர்களும் விரும்பிக் கொள்வனவு செய்கிறார்களா?

**பதில் -** சில பாரம்பரிய உற்பத்திகளை அதாவது ,வடகம் சத்துமா, கஞ்சிக் கலவை போன்றவற்றை எமது புலம்பெயர் உறவுகள் மிகவும் விரும்பி வாங்குகின்றனர்.

**கேள்வி -** நல்லது. நீங்கள் ஒரு பெண் தொழில் முயற்சியாளராகவும் பல பெண் தொழில் முயற்சியாளர்களுக்கு வளவாளராகவும் செயல்படுகின்ற காரணத்தினால் தற்போது எமது பெண்களுக்கு நீங்கள் சொல்ல விரும்புவது என்ன?

**பதில் -** உண்மையிலேயே இது ஒரு நல்ல கேள்வி. எமது பெண்கள் காலம் காலமாக சம்பளம் அற்ற சேவகத்தையே செய்துவந்து கொண்டிருக்கின்றனர். தற்போது நிலைமை மாறி இருந்தாலும் பெரும்பாலான பெண்கள் தமது அடிப்படை தேவைகளுக்கு கூட இன்னும் ஒருவரில் தங்கி இருக்க வேண்டிய ஒரு துர்பாக்கியமான நிலைமையில் இருக்கின்றனர். அவர்களுக்கு நான் சொல்ல விரும்புவது என்னவென்றால் தோழிகளே ,நீங்கள் ஒவ்வொருவரும் நமது தேவைகளையும் பூர்த்தி செய்யக்கூடிய வருமானமீட்டக் கூடிய பெண்களாய் மாற வேண்டும். குடும்பத்தில் நாங்கள் மாறினால் தான் ஒரு சமூகத்தில் மாற்றத்தை கொண்டு வர முடியும்.

ஒவ்வொரு பெண்களும் எங்களது திறமைகளுக்கு ஏற்ப குடும்ப பொருளாதாரத்தை பலப்படுத்துவதில் பங்களிக்க வேண்டும் என்பதோடு எல்லா பெண்களும் தமது சொந்த காலில் நிற்க பழகிக் கொள்ளவேண்டும்.

நன்றி திருமதி ஜெயகாந்தி ஜனா அவரகளே உங்களுடைய குட் லைப் நிறுவனமானது மென்மேலும் வளர்ச்சி அடையவும் நீங்கள் பல தொழில் முயற்சியாளர்களுக்கு முன்னுதாரணமாக திகழவும் எங்களது வாழ்த்துக்கள்.

*















AGS. சுவாமிநாதன் சர்மா
நிர்வாக இயக்குனர் @ A. G. Sarma & Co., (CA) பட்டயக்கணக்காளர்,
வரி முகாமைத்துவ ஆலோசகர்

**இந்த 2023 ஆம் வருடத்தினை நாம் எவ்வாறு சிக்கலில்லாமல் கையாளப்போகின்றோம் என்பது மிகவும் முக்கியமானதாகும். இந்த ஆண்டினை நாம் சாதுரியமாக கடந்து செல்வோமானால் நிச்சயமாக நமக்கு ஒரு சிறந்த எதிர்காலம் காத்துக் கொண்டிருக்கின்றது.**

# கடன் – வட்டி காரணமாக கஷ்டப்படும் மக்கள்



சமகாலத்தில் சகல இலங்கை வாழ் மக்களாலும் அதிகம் பேசப்படுகின்ற ஒரு விடயம் எது என்றால் “கடனுக்கான வட்டி” விகிதம் பற்றியே எனக் குறிப்பிடலாம். முழு உலகமே அதிசயிக்கும் வண்ணம் இலங்கையில் “கடனுக்கான வட்டி” விகிதங்கள் மிகவும் அதிக நிலையில் காணப்படுகின்றன.

இலங்கையில் மூன்று தசாப்தங்களுக்கு மேலாக நிலவிவந்த உள்நாட்டு பிரச்சினை முடிவுக்கு வந்து நாடு ஒரு சிறந்த பாதையை நோக்கி வந்தமையை நாம் தெளிவாக அவதானித்தோம். அது வரை கடனுக்கான வட்டி விகிதங்கள் 15% இற்கும் குறைவாக காணப்பட்டிருந்தது. அதன்பின்பு “COVID-19” எனும் கொடிய வைரஸ் நோயின் தாக்கத்தின் காரணமாக இலங்கையின் பொருளாதாரம் பாரிய பின்னடைவை சந்திக்க ஆரம்பித்தது. அத்தோடு இலங்கை அரசாங்கத்தின் அதிகப்படியான வெளிநாட்டு கடன்கள் வாயிலாக மேற்கொள்ளப்பட்ட பாரிய அபிவிருத்தி செலவுகளால் இலங்கையின் கடன் சுமை மேலும் அதிகரித்துக் கடனுக்கான வட்டியையைக்கூடச் செலுத்த முடியாத ஒரு துர்ப்பாக்கிய நிலையை இலங்கை அடைந்துள்ளது.

இதன் விளைவாகக் கடன் கொடுக்கும் பல நாடுகளும் நிறுவனங்களும் இலங்கை நாட்டினை வங்குரோத்து அடைந்த நாடாக தரவிறக்கம் செய்துள்ளனர். இதற்கு முக்கிய காரணமாக இலங்கையின் மொத்த தேசிய உற்பத்தி மற்றும் வருமானம் நாட்டின் மொத்த செலவினத்திற்குபோதுமானதாக இல்லாமை மற்றும் பாரிய பாதீட்டு பற்றாக்குறையைத் தொடர்ச்சியாக ஏற்படுத்தி வருவதை சுட்டிக்காட்டலாம். இதன் காரணமாக இலங்கை தமக்கு தேவையான அத்தியாவசிய பொருட்களின் இறக்குமதியினைத் தடைசெய்ய நேரிட்டது. இதன் ஒரு பகுதியே மக்கள் சந்தித்த பாரிய உணவு தட்டுப்பாடு, மருந்து, சமையல் எரிவாயு மற்றும் எரிபொருள் தட்டுப்பாடு போன்றனவாகும்.

மக்களின் தேவைக்கேற்ப பொருட்கள் சேவைகளினை பெற்றுக்கொள்ள முடியாத காரணத்தினால் அவற்றுக்கான விற்பனை விலையில் பாரிய அதிகரிப்பு ஏற்பட்டது. நாட்டில் வேலையில்லாப் பிரச்சினை தலைதூக்கத் தொடங்கியமை, மக்களின் வருமானம் போதியதாக இல்லாமை, அதே நேரம் வருமானத்தில் பெரும் சரிவு ஏற்பட்டமை போன்றவற்றை காணக்கூடியதாக இருந்தது. எனவே மக்கள் தமது அத்தியாவசியத் தேவைகளை பூர்த்தி செய்ய மிகவும் கஷ்டப்பட்டுக்கொண்டிருப்பதனை தற்பொழுது கண்கூடாகப் பார்க்கக் கூடியதாக இருக்கின்றது. இதன் காரணமாக இவ்வளவு காலம் சிறிது சிறிதாகச் சேமித்து வைத்த பணம் முடிவதனால்/முடிந்தமையால் மக்கள் அன்றாட வாழ்க்கையை நடாத்தக் கடன் பெறவேண்டிய துர்ப்பாக்கிய நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர்.

பொதுவாக மக்கள், வர்த்தக வங்கிகள், நிதிநிறுவனங்கள், தாம் வேலை செய்யும் நிறுவனங்கள், தனியார் கடன் கொடுக்கும் நபர்கள், சீட்டுப் பிடித்தல், அசையும் (தங்க நகைகள், வாகனம்) மற்றும் அசையாச் சொத்துக்களை ஈடாக வைத்தல் போன்ற முறைகளில் தமக்குத் தேவையான கடனை பெற்றுவருவதனை காணக்கூடியதாக இருக்கின்றது. தற்காலத்தில் அத்தியாவசிய மட்டுமன்றி இதர தேவைகளை பூர்த்தி செய்வதன் வாயிலாகத்தான் தொழில்நுட்பப் புரட்சி நடக்கின்ற காலகட்டத்தில் மக்கள் வாழலாமென்ற நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர். இதன் காரணமாக தமது வேலைகளை இலகுவாக்கும் பல இலத்திரனியல் சாதனங்களை வைத்திருப்பது ஒரு அத்தியாவசிய அங்கமாகக் காணப்படுகின்றது. உதாரணமாக மடிக்கணினி, கையடக்கத்தொலைபேசி, குளிர்சாதனப்பெட்டி, இலத்திரனியல் அடுப்பு, துணி துவைக்கும் இயந்திரம் என அடுக்கிக்கொண்டே போகலாம்.

எமது பழைய கால வாழ்க்கை முறைமையிலிருந்து விலகத் தொடங்கியதன் காரணமாக இவ்வாறான பொருட்கள் சேவைகளை விரும்பியோ விரும்பாமலோ நாம் ஒவ்வொருவரும் எமது

நாளாந்த வாழ்வில் வைத்திருக்க வேண்டிய நிலைமைக்குத் தள்ளப்பட்டுள்ளோம். இதன் காரணமாக மக்கள் தமது வருமானத்திற்கு அதிகமான செலவினைச் செய்ய வேண்டிய கட்டாய நிலையில் சிக்கிவிட்டனர் என்பதே உண்மையாகும்.


இலங்கை ஒரு சிறிய நாடு மட்டுமன்றி 90% தேவையை இறக்குமதி வாயிலாகத்தான் பூர்த்தி செய்கின்ற தன்மையை தற்பொழுது கொண்டுள்ளது. கடந்த மூன்று ஆண்டுகளாக நிலவுகின்ற பாரிய பொருளாதாரப் பின்னடைவு, இலங்கை ரூபாய் பெறுவதில் பாரிய வீழ்ச்சி, அரசாங்கத்தினால் கொண்டுவரப்பட்ட இறக்குமதி பொருட்களுக்கான கட்டுப்பாடு மற்றும் தடை போன்ற காரணங்களினால் சகல பொருட்களின் விலைகளிலும் பாரிய





விலை அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது. ஏற்கனவே கடனைப் பெற்று வாழ்க்கையை நடாத்தி வரும் சந்தர்ப்பத்தில் இந்த பாரிய தாக்கத்தினால் மேலும் கடன்களை எடுத்துத்தான் அன்றாட அத்தியாவசிய மற்றும் இதர தேவைகளை பூர்த்தி செய்ய முடியும் என்ற நிலைக்கு நாம் ஒவ்வொருவரும் இன்று தள்ளப்பட்டுள்ளோம். எது எவ்வாறாக இருந்தாலும் திருமணம் மற்றும் மதவிழாக்கள், வாழ்வில் முக்கியமான நிகழ்வுகள் போன்ற வற்றை நாம் ஒரு முறைமையின் கீழ் நடத்தி வருகின்றமையால், அந்த முறைமையிருந்து பெரிதாக எம்மை மாற்றி அமைத்துக் கொள்ள முடியாமையினாலும் நாம் மேலதிக கடனைப் பெற வேண்டிய நிலைமைக்கு தள்ளப்பட்டுள்ளோம் (Living Style).

ஏனைய அபிவிருத்தி அடைந்த நாடுகளை போன்றல்லாது, அரசாங்கத்தினால் இலங்கை மக்களுக்கு போதியளவு சலுகைகள் வழங்கப்படாமையும், இலங்கை ஒரு அபிவிருத்தி அடைந்துவருகின்ற நாடாக இருக்கின்றமையும், நாட்டில் அதிகமான நடுத்தர வர்க்கத்தினர் காணப்படுவதாலும் சிக்கல்கள் வலுப்பெற்று வருவதனை காணக்கூடியதாக இருக்கின்றது.

நாளுக்குநாள் பிள்ளைகளின் கல்வி செயற்பாடுகளுக்கு அதிகமான பணம் தேவைப்படுவதை நாம் நடைமுறையில் காணக்கூடியதாக இருக்கின்றது. பொதுவாகவே தனியார் வகுப்புகள், கணினி





கல்விகள், தொழில்சார் கல்விகள், வெளிநாடு செல்ல வேண்டிய தகுதியை பெறும் தகைமைச் சான்றிதல், வெளிநாட்டுப் பல்கலைக்கழகங்களுக்கான கொடுப்பனவுகளின் அதிகரிப்பு, வெளிநாட்டுக் கல்வி மற்றும் இதர சேர்க்கைக் கட்டண அதிகரிப்பு போன்றன துரதிஷ்டவசமே.

பொதுவாகவே கடன், வட்டி போன்ற பிரச்சினைகளைத் தவிர்த்துக்கொள்ள பின்வரும் சில நடைமுறைகளை கடைப்பிடித்தல் சிறந்ததாக நான் கருதுகின்றேன்.

* வருமானத்திற்கு ஏற்ற வாழ்க்கையை அமைத்துக் கொள்ள வேண்டும்.

* முடியுமானவரை கடனைப் பெறாமல் இருத்தல் வேண்டும்.

* வீட்டில் உள்ள அனைத்து உறுப்பினர்களுக்கும்கஷ்ட நஷ்டங்களை தெரியப்படுத்தவேண்டும்.

* தேவையற்ற ஆடம்பர செலவுகளை அறவே தவிர்த்தல் வேண்டும் (உதாரணமாகப் பிறந்தநாள் கொண்டாட்டம், ஆடம்பர திருமணங்கள்...etc)

* பிள்ளைகளுக்கும் வீட்டில் உள்ள அனைவருக்கும் சேமிப்புப் பழக்கத்தை ஊக்கப்படுத்தல்.

* கட்டாயமாக மாதாந்தச் சேமிப்பாக ஒரு தொகையை மேற்கொண்டுவருதல்.

* மீள்சுழற்சி முறைமையை ஊக்கப்படுத்துவதன் மூலம் கொள்வனவு செய்கின்ற பொருட்களின் பாவனையை பன்மடங்காக்குதல். ( Recycling of Products).

* மின்பாவனை மற்றும் நீர்ப்பாவனை போன்றவற்றை சிக்கனமாக பயன்படுத்த கற்றுக் கொடுத்தல். இதன் மூலம் நாட்டுக்கும் வீட்டுக்கும் நன்மை ஏற்படும்.

* தேவையற்ற பிரயாணங்களை அறவே தவிர்த்தல். இதன் மூலம் நேரம் மற்றும் பணம் விரயமாதலை தடுக்கலாம்.

* கட்டாயக் கொடுப்பனவுகளை உரிய நேரத்திற்கு செலுத்தி தண்டப்பணம், சட்ட நடவடிக்கைகள் போன்ற வீண் விரயங்களைத் தவிர்த்தல். (உதாரணமாக மின்சாரம், நீர், தொலைபேசி, வரி போன்ற கட்டணம்.)

கடன் அட்டை (Credit Card) பாவனையினை மிகவும் அவதானமாகச் செய்தல். உரிய திகதிக்குள் கடனட்டைக் கொடுப்பனவுகளை மீள்செலுத்துவதன் மூலம் தண்டப்பணம் (Late Payment Fee), அதிக வட்டி (38% Interest) போன்றவற்றை தவிர்த்துக் கொள்ளமுடியும்.

* ஆடம்பரப் பொருட்களின் கொள்வனவுகளைத் தவிர்த்துக் கொள்ளல்.

* தேவைக்கு அதிகமாக இருக்கின்ற அசையும் அசையா சொத்துக்களை விற்று கடன்களை மீள் செலுத்தல்.

* அரசாங்கத்தினால் இலவசமாக வழங்கப்படுகின்ற மருத்துவம், கல்வி, போக்குவரத்துப் போன்றவற்றைப் பயன்படுத்த ஊக்குவித்தல்.

* முடியுமானவரை எமது வாழ்க்கை முறைமையை இலகுவாக அமைத்துக் கொள்ளல். (உதாரணமாக:- வீட்டில் சமைத்த உணவை உண்ணுதல், நடை மூலம் அல்லது மிதிவண்டி மூலம் செல்ல வேண்டிய இடங்களுக்கு செல்லுதல், சீரான உடற்பயிற்சி, தியானம், யோகாசனம் போன்றவற்றை கிரமமாக செய்தல். இதன் வாயிலாக உடல் ஆரோக்கியம் பெறுவதுடன் மருத்துவ செலவு குறைவடையும்).

* குறைந்த வட்டி வீதத்தில் இருக்கின்ற சேமிப்பு கணக்குகள், வங்கியின் நடைமுறை கணக்கில் இருக்கின்ற பணம், கையில் காசாக இருக்கின்ற சேமிப்புக்களினை ஒன்றுதிரட்டி, வட்டி அதிகமாக இருக்கின்ற கடன்களை மீள்செலுத்துதல்.

* தேவையற்ற முதலீடுகளைத் தவிர்த்துக் கொள்ளலாம்/பிற்போடலாம். (உதாரணமாக வீட்டினை நவீன மயமாக்குதல், புதிய வீடு மற்றும் புதிய வாகனங்கள் கொள்வனவு செய்தல் போன்றன).

* அத்தியாவசியமற்ற உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப் பிரயாணங்கள் / கேளிக்கை நிகழ்ச்சிகளைத் தவிர்த்தல் / பிற்போடுதல்.

இந்த 2023 ஆம் வருடத்தினை நாம் எவ்வாறு சிக்கலில்லாமல் கையாளப் போகின்றோம் என்பது மிகவும் முக்கியமானதாகும். இந்த ஆண்டினை நாம் சாதுரியமாக கடந்து செல்வோமானால் நிச்சயமாக நமக்கு ஒரு சிறந்த எதிர்காலம் காத்துக்கொண்டிருக்கின்றது. தற்போது நிலவுகின்ற கடனுக்கான வட்டி வீதங்கள் பாரிய அளவில் குறைக்கப்படாமல் இருப்பின், மக்கள் மேலும் கடன் பெற வேண்டிய நிலைக்கு தள்ளப்படுவதுடன் பெற்ற கடனையும் அதற்கான வட்டியையும் செலுத்த முடியாத நிலைக்கு தள்ளப்படுவார்கள். மக்களை பாதுகாப்பது அரசாங்கத்தின் கடமையாகும். இதனை கருதிற்கொண்டு உடனடியாக வட்டிக்கான கடனை குறைத்து மக்கள்படும்கஷ்டத்தை ஓரளவாவது குறைக்க வேண்டும் என்பது எனது எண்ணம். *

தமிழர் பொருளியம் வாரமலர் TAMILS ECONOMY



ஞாயிற்றுக்கிழமை
12.02.2023



## எங்கள் வாழ்வும் வளமும்

- தமிழ்க்கவி -

# வாழையடி வாழை

எங்கள் மூத்தவர்கள் ஒரு தம்பதியையோ, அல்லது ஒரு குடும்பத்தையோ வாழ்த்தும்போது “வாழையடி வாழையாக வாழுங்கள்“ என வாழ்த்துவது வழக்கம். காரணம் வாழை தன் வாழ்க்கையைத்O தன்னோடு முடித்துக் கொள்வதில்லை. அதன் அடியிலிருந்து மீண்டும் துளிர்க்கும் புதிய வாழைகள். அதன் அடி அழியாமல் காத்து நிற்கிறது.

“இல்லை உங்கட நெஞ்சைத் தொட்டு சொல்லுங்க இது இப்பவும் அதாவது இந்தக் காலத்துக்கும் சரியா?“ இல்லவேயில்லை. வாழைகள் தம்மைப் புதுப்பித்துக் கொள்கின்றன. அதனாலென்ன நாம் பார்க்கப் போவது வாழையின் வளமான பகுதிகள்.

வாழையில் பலவகைகள் உள்ளன என்றாலும் நாம் நமது மண்ணில் பாரம்பரியமாக நடைமுறையிலிருக்கும் வாழைகளைப்பற்றி பார்ப்போம்.

கதலி, கப்பல், இதரை, கறிவாழைகளில் சாம்பல்வாழை மொந்தன்வாழை, எனச் சில வகைகள் உண்டு. வாழைகளில் இன்னும் அதிகமான புதியவை செவ்வாழை, யானைவாழை, மலைவாழை போன்ற குளிர்ப்பிரதேச வாழைகளும் உண்டு.

வாழை மரத்தின் எந்தப்பகுதி மனிதர்களுக்கு உணவாகிறது. வாழையின் எநதப்பகுதி மனிதர்களுக்கு மருந்தாகிறது. வாழையின் எந்தப்பகுதி மனிதர்களின் ஏனைய பயன்பாடுகளுக்கு உதவுகிறது. என்று பார்த்தால்... வாழையின் கிழங்கிலிருந்து ஊறும் நீரும் வீணாவதில்லை. மற்றப்படி வாழைக்காய் கறி, வாழைக்காய் பொரியல், வாழைக்காய்ச் சுண்டல், வாழைப்பழம், என்று நாம் சாப்பிடும் விதங்களை எழுதி மினைக்கெட வேண்டுமா? விடுவோம்.

> “வாழைத்தண்டு சிறுநீர்க் கற்களுக்கு மிக அருமையான மருந்து. அதை கறியாக சுண்டலாக பொரியலாக எல்லாம் செய்யமுடியும் சுவையும் தரமாக இருக்கும். வாழையின் பூவில் சுண்டல், சம்பல், வடை, எனப் பல வகைகளில் சமைக்கலாம். வாழைப்பட்டையின் சாறு தீப்பட்ட புண்ணுக்கு அருமையான மருந்து.”

எங்கள் ஊரில் போர் நடந்தது. முப்பது ஆண்டுகள் நீடித்த போர். இந்தக்காலத்தில், எமது பிரதேசத்தின் மக்களின் வாழ்விடங்கள் பெரும்பாலும் காடும், காடுசார்ந்த மண் பட்டினங்களுமே. மக்களுக்கு முக்கியமான மருந்துகள் வைத்திய வசதி,போக்குவரத்து என்பவை கிடைப்பதில்லை. பொருளாதாரத்தடை உச்சத்தில் நின்கின்றது. இக்காலத்தில் பெருமளவு விபத்துகள் மட்டுமல்லாமல் பாம்புக்கடியிலும் மக்கள் அன்றாடம் பாதிக்கப்பட்டனர்.

நான் ஒரு அரை வைத்தியஉதான் என்றாலும் எனது முப்பாட்டன் வழி சித்த வைத்தியர்களின் தொடர்வு அறாமல் இருந்தது. எனது தந்தை வழிப்பேத்தி பின் தந்தை என அவரைத் தொடர்ந்து அந்த வைத்திய வாகடங்களை ...என்னவோ சொல்வார்களே “கண்டது கற்க பண்டி தனாவான்” என்று. அந்த பழக்கம் எனக் கும் இருந்ததால் நேரம் கிடைத்த போதெல்லாம் படிப்பேன். அது என்னவோ என்மனதில் பதிந்து போயிற்று.



பால மோட்டைப்பகுதியில் ஒரு பெண்ணை பாம்பு கடித்துவிட்டது. அவள் மோசமான மயக்க நிலையில் இருந் தாள். நான் தற்செயலாகத்தான் அங்கே போனேன். கிராம மக்கள் பலர் கூடியி ருந்தனர். அவளது உயிர் இருக்கும் போதே மரணச்சடங்கிற்கான ஒழுங்கு கள் நடந்து கொண்டிருந்தன. அதாவது மால் ஒதுங்கவைத்து பந்தலுக்கான தடி கம்புகள் கொண்டு வந்து குத்துவிளக்கு விளக்கி... நான் போன போது இந்த செய்கைகளும் என்னை அருட்டின.

“ஏனப்பா மருந்தைக்குடுத்து பாக்க லாமே” என்றால்,

:எங்கயம்மா வைத்தியரே இல்லை கடிச்ச அதுவும் பொல்லாத விஷங்கொண் டது.” என்றார் அழுதவாறே அவள் தந்தை. நான் விடாமல் அருகிலிருந்த முற்றிய வாழையை வெட்டப் பணித்தேன். அதன் பட்டைகளை உரித்து அதில் அவளை படுக்க வைத்தேன். வாழையின் நடுத் தண்டை உரலில் இடித்து ஒரு கோப்பை சாறு பிழிந்து அவளது வாயில் பருக்கி னேன். சாகப் போறவள்தானே ஏதோ செய்யட்டும் என்றுதான் பேசாமல் இருந் தார்கள் என நினைக்கிறேன்.

ஒரு மணி நேரத்தில் அவள் எழுந்து எல்லோரிடமும் சகசமாக பேசினாள்.. நான் விட்டுவிட்டு என் வேலையை பார்க்கப் போனேன். மறுபடியும் நான் மாலையில் அந்த வீதிவழியாக வரும் போது அவள் தன் வீட்டுக்கான உணவை சமைத்துக் கொண்டிருந்தாள். சொன் னால் நம்ப மாட்டீர்கள். இதே மருந்தில் மேலும் மூவர் கொடும் விசக்கடியிலி ருந்து உயிர் தப்பினார்கள். ஒரு முதியவள் மயக்கமடைந்து விட்டாள். அவளது பிள்ளைகள் எதையோ வைத்து அவளது வாயை நெம்பி வாழைத் தண்டுச்சாற் றைப் பருக்கினார்களாம். பாவம் அந்தப் பெண்ணின் முன்னம் பற்கள் உடைந்து போயிற்று. ஆனால் அரைமணி நேரத் தில் மயக்கம் தெளிந்து எழுந்தாள்.

பின்ன நானென்ன கதையா சொல் லிக் கொண்டிருக்கிறன். நம்புங்கள் நடந் தது. வாழைக்கிழங்கு ஓர் அருமையான மருந்து அதனை நாங்கள் பெருமள வில் கோழிப்பண்ணைகளில் நோய்த் தாக்கம் ஏற்படும்போது அவற்றுக்கான தீனியில் கலந்து வைப்போம். கடையில் விற்கும் இரசாயன மருந்துகளை விட அருமையாக வேலை செய்யும். கோழிக ளும் விரும்பிச்சாப்பிடும்.

வாழைத்தண்டு சிறுநீரக் கற்களுக்கு மிக அருமையான மருந்து.

அதைக் கறியாக சுண்டலாக பொரிய லாக எல்லாம் செய்யமுடியும் சுவையும் தரமாக இருக்கும். வாழையின் பூவில் சுண்டல், சம்பல், வடை, எனப் பல வகைக ளில் சமைக்கலாம். வாழைப்பட்டையின் சாறு தீப்பட்ட புண்ணுக்கு அருமையான







மருந்து. வாழை இலையில் வாட்டாமல் சுடு சோற்றைப்பரப்பி அந்த வெப்பத்தில் இலை வாட கட்டுச்சோறு கட்டி அதை நேரம் கழித்து சாப்பிட்டால் தேகத்தின் வெப்பம் தணிவதுடன், அருமையான வாசனை சுவை இரண்டும் இருக்கும். வாழையின் வாழ்க்கை முதல் பிரச வத்திலேயே முடிந்துவிடும்.

“வாழைக்குத் தான் ஈன்ற குலையே கூற்றம்” என்பர். வாழையை அதன் குட்டியை நட்டு உருவாக்கிய கதைதான் பழையது. இப்போது பெரும் கிழங்கிலி ருந்து மொக்குகளைப் பிரித்தெடுத்து சிறு கன்றுகளை உருவாக்கிப் பெரிய பண் ணைகளில் நடுகிறார்கள் அவை புதிய நவீன ரகங்களாகவும் இருக்கிறது. அவற் றின் பழங்கள் நீளமானவை. அவை நீண்டகால சேமிப்பையும் ஆயுளையும் கொண்டிருக்குமாறு பதப்படுத்தப்படுவ தையும் காண்கிறோம்.


எமது வாழைகளை ஒரு குறிப்பிட்ட காலம் முடிய நாமாகவே அழித்து புதிய தோட்டங்களை உருவாக்கி விடுவோம். இன்னும் கூடக் குட்டிகளை நடும் முறை யைத்தான் கடைப்பிடிக்கிறோம். வாழை யில் குருமன் பிடிக்கும். பிடித்தால் அதை வெட்டி அழித்து விடுவோம்.இதர வாழை யின் காற்று ஏனைய வாழைகளின் மேலாக வீசினால் அவை விரைவில் குருமன் பிடிக்கும் என் என் தந்தை சொல்வார். என் அனுபவத்திலும் அது சரியென உணர்ந்திருக்கிறேன்.

வாழையின் குலையை வெட்டிய பின்னும் சரி முன்னும்சரி அதன் சருகு கள் வேலியடைக்கவும் அதன் பட்டை காய்ந்த பின் நாராகவும் பயன்படுகிறது.

குலையை வெட்டியபின் அந்த வாழைக்குத்தியிலிருந்து நார் பிரித்தெடுக்கப்பட்டு கைப்பை செருப்பு கூடை இன்னும் பல அழ கிய கைவினைப் பொருட்கள் செய் யப்படுகின்றன. இந்த கைவேலை களில் பெண்கள் தமது ஓய்வு நேரத்தை பயனுள்ளதாக செய்கின் றனர்.

தமிழர்களின் வாழ்வில் எந்த விழாக்களானாலும் சடங்குக ளானாலும் வாழைமரமொன்றை வாசலில் கட்டி வைத்து வருபவர் களை வர வேற்கும் பண்பாடு உண்டு. இந்த அந்தஸ்து வெற்றி லைக்கும் உண்டு.

வாழைமரங்களை கோவிற் திருவிழாக்களிலும் கல்யாண வீடுகளிலும் வாசலில் கட்டி அழகு படுத்துவார்கள். வாழை எமது வாழ் வோடு பின்னிப் பிணைந்துள்ளது என்பதை இது காட்டுகிறது. விழாக் களில்வாசலில்கட்டும்வாழைகளின் குலைகளை பார்த்து அது மங்கல விழாவா அமங்கல விழாவா என கண்டு கொள்ளலாம். காய்வாழை அதுவும் சாம்பல் வாழை மரணச்சடங்குகளிலும், நிரம்பி முற்றிப்பழுத்த கதலி வாழை திருமண விழாக்களிலும், கோவில்களி லும் கட்டப்படுகிறது. விழா பலநாட்கள் தொடருமாயின் வாழையை வாட விடாது புதியவற்றை மாற்றிக்கட்டுவார்கள்.



# மண் வளத்தை அதிகரிக்கும் மண்புழு உரம்

யதுகுலா ரஜிதன்,
ஆராய்ச்சி உதவியாளர்,
பிராந்திய விவசாய ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிலையம்,
கிளிநொச்சி.

வளமான மண் எனக்கருதப்படுவது பொதுவாகப் பயிர் வளர்ச்சிக்குத் தேவையான போசணைகளை உள்ளடக்கியது. இதில் நைட்ரஜன் பொஸ்பரஸ் பொட்டாசியம் மட்டும் முக்கியமல்ல போறன், நாகம் மங்கனிஸ், இரும்பு போன்ற நுண்ணூட்டச்சத்து மற்றும் மக்கும் தன்மை ஆகியனவும் அவசியமாகிறது. மண் சுகாதாரம் அல்லது மண் நலம் என்று பார்ப்போமானால் பௌதீக இரசாயனக் கட்டமைப்புடன் உயிரியல் கட்டமைப்பையும் உள்ளடக்கியதாக இருக்கும். இயற்கை மண் உயிர்ப்பானது. மண்ணில் கண்ணுக்குப் புலப்படாத நுண்ணுயிர்கள், பூஞ்சணங்கள், பாசிகள் மற்றும் கண்ணுக்குத் தென்படக்கூடிய பெரிய பூச்சி இனங்கள், எறும்பு, மண்புழு, கரையான் என்பனவற்றின் செயல்கள் தொடர்ச்சியாக நடைபெற்றுக் கொண்டுள்ளன.



மண்ணில் பல்வேறு உயிரினங்கள் தொடர்ந்து செயலாற்றிக் கொண்டே இருக்கின்றன. இதனால் மண் பொலபொலப்பாகவும் சத்து நிறைந்ததாகவும் இருக்கிறது. மண் என்பது தனியே தாவர வேரை பற்றிப் பிடிப்பதற்கான ஊடகம் மட்டுமல்ல. ஆரோக்கியமான பயிர் வளர்ச்சிக்கு ஆரோக்கியமான மண் தேவைப்படுகிறது. உயிர்ப்பான மண் ஆரோக்கியமான பயிர்களை உருவாக்கும் வல்லமை கொண்டது.தொடர் இரசாயன பாவனையினால் மண்ணில் உள்ள நுண்ணுயிர்கள் மற்றும் மண்புழு போன்ற அங்கிகள் அழிந்து போகின்றன, வெறுமனே மண் மட்டுமே எஞ்சும்.

மண்புழு உரம் எவ்வாறு மண்வளத்தில் செல்வாக்குச் செலுத்துகிறது?

இப்புவியில் மூவாயிரத்துக்கும் மேற்பட்ட மண்புழு இனங்கள் உள்ளன. விவசாயிகளின் நண்பன் மண்புழு. ஏனெனில் மண்புழு தொடர்ச்சியாக மண்ணில் உள்ள கழிவுகளை உண்பதன் மூலம் மேல் கீழாகத் துளைகளை ஏற்படுத்திக் கொண்டுள்ளது. மண்புழு விஞ்ஞானி சுல்தான் அகமத் இஸ்மாயில் மண்புழு மண்ணின் நாடி என்று கூறியுள்ளார்.

கரிமக் கழிவுகளை மண்புழுவை பயன்படுத்தி மக்கச் செய்து தயாரிக்கப்படும் உரம் மண்புழு உரம் எனப்படுகிறது. மண்புழு உரத்தினை தொடர்ச்சியாக வருடம் முழுவதும் மண்ணிலேயே உற்பத்தி செய்து கொள்ள முடியும். சாதாரண தட்ப வெப்ப சூழ்நிலைகளில் இதனுடைய இன விருத்தி அடையும் தன்மை அதிகம்.



இதனைத் தயாரிப்பதற்கு 40 தொடக்கம் 60 நாட்கள் வரை எடுக்கும். இயற்கையில் கிடைக்கக்கூடிய மக்கிய கழிவுகளை மண்புழுவானது உணவாக உட்கொண்டு, அதன் உடலில் உள்ள நுண்ணுயிர்கள் மற்றும் நொதியங்களினால் அவை செரிமானத்துக்கு உட்பட்டுச் சிறு சிறு உருண்டைகளாக மலமாக வெளியே வரும் குருணல் மண்புழு உரம் ஆகும். இதனால் மண்ணில் நுண்ணுயிர்களின் எண்ணிக்கை அதிகரிக்கப்படுவதுடன் நோய்க் கிருமிகளை இந்த மண்புழுக்கள் அழித்தும் விடுகின்றன. மண்புழு உரத்தில் நன்மை தரும் நுண்ணுயிர்களான அசட்டோபேக்டர், அசோஸ்பைரில்லம், பாஸ்போ பேக்டீரியா ஆகியவை அதிக எண்ணிக்கையில் இருக்கின்றன.

சாணத்தை நேரடியாக எருவாக பயன் படுத்தும்போது களைகள் நிறைய வரும். ஆனால் மண்புழு உரம் தயாரிக்கும் பொழுது சாணத்தில் உள்ள களைகள் இறந்துவிடும்.

எவ்வாறு மண் புழுக்களை வேறு பிரிப்பது?

சாணப்பந்துகள் உரக்குழியில் பல இடங்களில் வைக்கப்பட வேண்டும். இதனால் மண்புழுக்கள் அந்தச் சாணத்தினால் கவரப்படுகின்றன. பிறகு இதனை தண்



ணீரில் இடுவதன் மூலம் சாணம் கரைந்து மண் புழுக்கள் பிரித்தெடுக்கப்படுகின் றன. இந்தப் புழுக்கள், அடுத்த மண்புழு உரம் தயாரிக்கப் பயன்படுத்தப்படுகின் றன.

அரை கிலோ மாட்டுச் சாணம் அரை கிலோ வெல்லம் சேர்த்து 20 லிற்றர் நீரில் கரைத்து அதை நிலத்தில் தெளித்து விட வேண்டும். 10 நாட்களில் மண்புழு அவ்விடத்தை நோக்கி வரும். சேகரித்து மண்புழு உரத் தயாரிப்புக்குப் பயன்படுத்த லாம் இல்லையேல் மண்புழு உற்பத்தி செய்பவர்களிடமிருந்து பெற்றுப் பயன் படுத்திக்கொள்ளலாம்.

**வீட்டில் மண்புழு உரம் தயாரிப்பது எப்படி?**

தொட்டியின் அடியில் காற்றுப் போவ தற்குத் துளைகளிட வேண்டும். தொட்டி யின் அடியில் தேங்காய்த் தும்பு அல்லது வைக்கோல் சேர்த்து அதற்கு மேல், மண் சேர்க்க வேண்டும். தொட்டியில் காய்கறி கழிவுகள், இலைக் கழிவுகள், மாட்டுச் சாணம், முட்டைக்கோதுகள், பழத்தோல்கள் என்பவற்றை ஒன்றாக கலந்து பாதி அளவு மக்க விடுதல் வேண்டும். பின்னர் அத னுள் மண்புழுக்களை விட வேண்டும். தினமும் நீர் தெளித்து வர வேண்டும். தொட்டியை ஈர சாக்கிட்டு மூடி விட வேண டும். 45 தொடக்கம் 50 நாட்களில் மண் புழு உரம் தயாராகி விடும்.

**மண்புழு உரத்தைப் பயன்படுத்துவ தனால் விளையும் நன்மைகள்**

மண்புழு உரத்தை மண்ணுக்கு இடுவ தனால் மண் துகள்கள் ஒன்றாக ஒட்டி சிறிய குருனல் போன்ற அமைப்பு உரு வாகிறது, இது மண்கட்டமைப்பை மேம் படுத்துகிறது. இதன் மூலம் மண்ணில் காற்றோட்டம் மற்றும் நீர் பற்றும் தன்மை அதிகரிக்கிறது. களிமண் பாங்கான மண்ணில் உள்ள குழம்புத் தன்மையைக் குறைக்கிறது.

மண் அரிப்பு, கோடை காலத்தில் மண்ணின் வெப்பநிலை ஆகியவற்றைக் குறைத்து வேர்க்காயம் ஏற்படுவதைத் தடுக்கிறது.

வாழை, தென்னை, கரும்பு, பழப்பயிர் கள் குறிப்பாக எலுமிச்சை, கொய்யா, மா போன்ற பழப் பயிர்களைப் பாதுகாக்க மண்புழு உரம் பயன்படுகிறது.

மழைக் காலங்களில் மண்ணை வெப்பமாக வைத்திருக்க உதவுகிறது. இதனால் சத்துக்களை எடுக்கும் புது வேர் கள் உருவாக மண்புழு உரம் பயன்படு கிறது. இதனால் பயிர்களில் நல்ல உற்பத்தி கிடைக்க வாய்ப்பு உருவாகும்.

மண்புழு உரத்தால் ஏற்படும் அமில மும் கார்பன்டை- ஆக்சைடு வாயுவும் மண்ணின் காரத் தன்மையைக் குறைத்து உரப்பிடிப்புத் திறனை மேம்படுத்துகிறது.

மண்ணில் உள்ள கரையாத தாதுக் களை கரையச் செய்து தாவரங்களுக்கு கிடைக்கக் கூடிய ஊட்டச் சத்தாக மாற்றுகி றது. மண்ணிற்குப் பேரூட்டச் சத்துக்கள் அளிப்பதுடன் தாவரங்களுக்குத் தேவைப் படும் அனைத்து வகை நுண்ணூட்டச் சத்துக்களையும் சீரான அளவில் வழங் குகிறது.

தீங்கு விளைவிக்கக் கூடிய கன உலோ கங்களை மண்ணில் இருந்து தற்காலி கமாக ஈர்த்து வைத்துக் கொள்வதால் தூய்மையான நிலத்தடி நீர், பயிர்களுக் கான ஊட்டச்சத்துக்களையும் ஆற்றலை யும் அளித்து மண்வள மேம்பாட்டிற்கு உதவுகிறது.

மண்புழு உரத்தில் கியூமிக் அமிலம் அதிகமாக காணப்படுவதால் வேர் வளர்ச் சியை ஏற்படுத்தும்

மண்ணின் நீர்பிடிப்புத் தன்மை அதி கரிப்பதால் பயிர் கோடையிலும், நல்ல முறையில் பாதுகாக்கப்படுகிறது

பூச்செடிகள், மிளகாய், மாதுளை, கத் தரி, வெண்டை ஆகிய பயிர்களுக்கு பயன் படுத்துவதில் அதன் உற்பத்தியிலும் வளர்ச் சியிலும் நல்ல வேறுபாடு காணப்படுகி றது.

மண்புழு உரத்தை உபயோகிப்பதால் பழம் மற்றும் காய்கறிகளின் சேமிப்புத் திறன் அதிகரித்து உள்ளமை ஆய்வுகளில் வெளிப்படுத்தப்படுகின்றது.

மண்புழு உரமானது சாதாரணமாக தயாரிக்கப்படும் மத்திய உரத்திலும் பார்க்க சிறப்பானது. தாவரங்களுக்குத் தேவை யான ஊட்டச்சத்து அதிகம் கொண்டது குறிப்பாக நான் பொட்டாசியம்.

* தாவரங்கள் வேகமாக வளரும்.
* சூழலுக்குப் பாதுகாப்பானது.
* இயற்கையாகத் தயாரிக்கப்பட்டது.
* பார உலோகங்கள் இல்லை.
* இயற்கையான பீடை நாசினியாகத் தொழிற்படும்
* வணிக ரீதியில் மண்புழு உரம் தயா ரிப்பு

* வணிக ரீதியில் மண்புழு உரம் தயாரிக்கும் பொழுது தொட்டியில் அல்லது குழிமுறையில் அல்லது நிலத்தில் படுக் கைகள் அமைத்து உரத்தைத் தயாரித்துக் கொள்ளமுடியும்.

**மண்புழு உரம் தயாரிக்கும் போது கவனிக்க வேண்டிய விடயங்கள்**

மண்புழு உரம் தயாரிக்கத் தெரிவு செய்யப்படும் இடத்தின் வெப்பநிலை (25 தொடக்கம் 30 டிகிரி செல்சியஸ்), ஈரப் பதன் (50 தொடக்கம் 60 சதவீதத்துக்குள்) நல்ல காற்றோட்டம் உள்ள நிழலான மற் றும் வடிகால் வசதி உள்ள இடமாக இருக்க வேண்டும்.

மழை மற்றும் வெயிலில் இருந்து பாதுகாக்கப்படக்கூடிய வகையில் அமைக்க வேண்டும்.

உரம் தயாரிக்க பயன்படுத்தப்படும் கழிவுப் பொருட்கள் பாதி மக்கியதாக இருக்க வேண்டும்.

எறும்பு, எலி போன்ற பீடைகளிலிருந்து பாதுகாப்பானதாக இருக்க வேண்டும்.

மண்புழு உர உற்பத்திக்குப் பொருத்த மான கட்டமைப்பு

சிமெண்ட் தொட்டி 2 அடி உயரம், 3 அடி அகலம், நீளம் வசதிகளை பொறுத்து அமைத்துக் கொள்ளலாம். கழிவுகளைப் படுக்கையில் இடும்போது பாதி அளவு மக்கிய கழிவுகளை பயன்படுத்த வேண் டும். தினமும் தண்ணீர் தெளிக்க வேண டும். அறுவடைக்கு முன்பு தண்ணீர் தெளிப்பதை நிறுத்தி விட வேண்டும்.

படுக்கை தயாரிப்பு : நெல்/ உமி அல் லது தென்னை நார்க்கழிவுகளைத் தொட்டி யின் அடிப்பாகத்தில் 3 cm உயரத்துக்கு பரப்பி அதன் மேல் ஆற்று மணல் 3cm உயரத்துக்குப் பரப்ப வேண்டும். அதற்கு மேல் 3cm உயரத்திற்கு தோட்ட மண்ணை பரப்பித் தண்ணீர் தெளிக்க வேண்டும்.

மண்புழு உர தயாரிப்புக்கு உகந்த மண் புழுவை தேர்ந்தெடுத்தல்: மண்புழு உற்பத்திக்குப் பயன்படுத்தப்பட வேண்டிய மண்புழுக்கள் மேல்மட்ட மண்புழுக்க ளாகும். ஆப்பிரிக்க மண்புழு (Eudrilus



eugeniae), சிவப்பு மண்புழு (Eisenia foetida) மற்றும் மக்கும் மண்புழு (Perionyx excavatus) ஆகிய ரகங்களை உற்பத்திக்கு பயன்படுத்தலாம். ஆபிரிக்க மண்புழு குறைந்த கால இடைவெளியில் கூடிய அளவு உரத்தை உற்பத்தி செய்கிறது.

நன்றாக மக்கிய உரம் மற்றும், மக்காத கழிவுகளை தனித்தனியாகப் பிரித்து எடுக்கப்படும். மக்காத கழிவுகளை மறுபடியும் மண்புழு படுக்கையில் இடவும். சிறந்த கழிவுகளாக பயிர்க் கழிவுகள், இலைகள், களைகள், வைக்கோல், உமி, தண்டு, இலை, பழத் தோல், சாணம், மாட்டுச்சலம், சாண எரிவாயு கழிவுப் பழுங்கள், முளைகாத விதைகள், தென்னை நார்க்கழிவு என்பவற்றை பயன்படுத்தலாம். மண்புழு உரத்திற்கு பயன்படுத்தப்படும் இலைகளில் முக்கியமாகப் பூவரசு இலை, வேப்பம் இலை, தேக்கம் இலை, எருக்கலை, நொச்சி இலைகள் ஆகியவற்றைப் பயன்படுத்தலாம். மண்புழுக்களுக்கு வேப்பம் இலை மிகவும் பிடித்த உணவு.

மக்கக்கூடிய கழிவுகளை மூடி அதில் சாணக்கரைசலைத் தெளித்து 20 நாட்களுக்கு மக்க விட வேண்டும். இவ்வாறு 20 நாட்கள் மக்கிய கழிவுகள் மண்புழு சாப்பிடுவதற்கு உகந்ததாக அமையும். கழிவுகளைப் படுக்கையில் இடும்போது பாதி மக்கிய கழிவுகளை 30 சதவீதம் கால்நடைக் கழிவுடன் கலக்க வேண்டும். இக்கலவையை மண்புழு உரத்தின் தொட்டியின் விளிம்பு வரை நிரப்ப வேண்டும். ஈரப்பதம் 60% இருக்க வேண்டும். தெரிவு செய்த மண்புழு இனத்தை அதன் மீது சமமாகப் பரப்ப வேண்டும். தினமும் தண்ணீர் தெளிக்க வேண்டும். ஏனெனில் ஈரப்பதத்தை பேண வேண்டும். மண்புழு உர படுக்கையின் மேல் உள்ள மண்புழு கழிவினை மட்டும் அறுவடை செய்ய வேண்டும். இந்த அறுவடையை வாரத்திற்கு ஒருமுறை செய்ய முடியும் . கைகளினால் மண்புழுக்கழிவினைச் சேகரித்து நிழலில் குவித்து வைக்க முடியும். இல்லையெனில் மண்புழு உரத்தை அறுவடை செய்வதற்கான இயந்திரத்தில் இட்டு அதனை பிரித்தெடுக்க முடியும். மண்புழு உரத்தை வணிக ரீதியில் மேற்கொள்ளமுடியும் இதற்கு ஆரம்ப முதலீடு தேவைப்படும். வீடுகளில் தேவைக்கு ஏற்பவும் சிறிய அளவில் செய்து கொள்ளமுடியும். ஒரு கிலோ கிராம் மண்புழு உரம் 100 ரூபாயிலிருந்து 150 ரூபாய் வரை விற்பனை செய்யப்படுகிறது

**ஊட்டம் ஏற்றப்பட்ட மண்புழு உரம்**

உயிர் உரங்கள் அல்லது நுண்ணுயிர்கள் Acetobactor, Azosprillum, Phospobacteria, Pseudomonas போன்றவற்றை பயன்படுத்தி ஊட்டம் ஏற்ற முடியும். இதனால் சத்துக்கள் அதிகரிக்கின்றன. ஒரு டன் கழிவிற்கு ஒரு கிலோ அசோபாஸ் (அசோஸ்பைரில்லம் மற்றும் பாஸ்போ - பேக்டீரியா) என்ற அளவில் இருபது நாட்களுக்கு பின் மண்புழு படுகையில் சேர்க்கலாம். இந்த நன்மை தரும் நுண்ணுயிர்கள் காற்றில் இருக்கும் நைட்ரஜன் சத்தை மண்புழு உரத்தில் நிலைநிறுத்துகிறது. பயிர்களுக்கு வேண்டிய வளர்ச்சி ஊக்கிகளை சுரந்து மண்புழு உரத்தில் நிலை பெறச் செய்கிறது. கரையாமல் இருக்கும் போஸ்பரஸ் ஐ கரைத்து கொடுக்கிறது. இதன் விளைவினால் உயிர் சத்துக்களை அதிகரிப்பதுடன் நன்மை விளைவிக்கும் உயிரினங்களையும் அதிகரிக்க முடியும். இது தொடர்பான ஆய்வுகளை யாழ் பல்கலைக்கழக விவசாய பீட மாணவர்கள் மேற்கொண்டு வருகிறார்கள்.

**மண்புழு உரம் அறுவடை செய்யும் முறை**

மண்புழு உரம் தயாரானவுடன் அது கறுப்புநிறத் துகள்களாக மாறிவிடும். அதன் பின் தண்ணீர் தெளிப்பதை நிறுத்திவிட வேண்டும். மேலும் உரம் தயாரிக்கும் இடத்தின் அருகில் புதிய சாணத்தை வெல்லத்துடன் கலந்து (1kg சாணம் 1kg வெல்லம்) நீர் தெளித்து வைத்தால் இந்த மண்புழு உரத்திலுள்ள மண்புழுக்கள் அருகில் உள்ள புதிய சாணம் மற்றும் வெல்லக் கலைவைக்குச் சென்ற பின் மண்புழு உரத்தைப் பயன்படுத்திக் கொள்ளலாம். இந்தியாவில் மண்புழு படுக்கையின் மேல் அடுக்கில் இருந்து கீழ் அடுக்கிற்கு மண்புழுக்களைக் கொண்டுசெல்ல மின்சார அதிர்வு வகைகள் பயன்படுத்தப்படுகன்றன.

**சேமிப்பு**

மக்கிய உரத்தை பொதி செய்வதைப் விடத் திறந்த வெளியில் சேமிப்பது நன்று. திறந்த வெளியில் உரத்தைச் சேமிக்கும் பொழுது தண்ணீர் தெளித்து ஈரப்பதத்தை காப்பதன் மூலம் நுண்ணுயிர்கள் அழிவதைத் தடுக்கலாம். 40 சதவிகித ஈரப்பதத்துடன் வைப்பதனால் மண்புழு உரத்தின் தரம் குறையாமல் பாதுகாக்கலாம். விற்பனையின் போது பொதி செய்தல் சிறந்தது.

**மண்புழுத்திரவம்**

மண்புழுத்திரவம் (Vermiwash) என்ற மண்புழு உரக் கரைசலையும் தயாரிக்கலாம். ஒரு பெரிய வாளியிலோ, தொட்டியிலோ குறிப்பிட்ட அளவுக்கு மண் எடுத்து மண்புழுக்களை விட்டு அதனுள் மாட்டுச் சாணம் இட்டு, வாளியின் மேற்பகுதியில் துளித் துளியாகத் தண்ணீர் விழவைக்க வேண்டும். இந்தத் தண்ணீர் சாணம், வைக்கோல், மண்புழுக்கழிவு ஆகியவற்றுடன் கலந்து உரச்சத்து மிகுந்த கரைசலாக வாளியின் அடிப்பகுதியில் உள்ள துளை மூலம் கிடைக்கும். இந்தக் கரைசலைத் திரவ உரமாகப் பயன்படுத்தலாம்.

உற்பத்தி திறனை அதிகரிக்கும் மண்புழு உரம் தயாரிப்பது தொடர்பான பயிற்சிகளை விவசாய பீடம், யாழ் பல்கலைக் கழகம் மற்றும் விவசாய திணைக்களங்கள் நடத்துகின்றன. இவை தொடர்பான விடயங்களை அருகில் உள்ள விவசாயத் திணைக்களம் மற்றும் விவசாய ஆலோசகரை தொடர்புகொள்வதன் மூலம் பெற்றுக் கொள்ள முடியும்.

**கால்நடைத் தீவனம்**

முதிர்ச்சி அடைந்த மண்புழுக்களை பிரித்து வெப்பக் காற்றோட்டத்தில் ஊற வைத்து அதைக் கால்நடைகளுக்கு உணவாக கொடுக்கலாம். இதில் 70 சதவீதம் புரதம் உள்ளது.

**படங்கள் உதவி:- அன்டன் ராஜ், கல்மடு மண்புழு உரம் தயாரிப்பாளர்.**

# தக்காளியின் கதை



- ஆசி கந்தராஜா -

தக்காளியில் இரண்டு வகைகள் உள.

1) 'Determinate' தக்காளி

2) 'Indeterminate' தக்காளி

பெரும்பாலும் 'Determinate' தக்காளி இனங்களேயே நாம் ஊரில் பயிரிடுகிறோம். இவைகள் குறிப்பிட்டளவு வளர்ந்தவுடன் வளர்ச்சியை நிறுத்திப் பூத்துக் காய்த்து, ஒரு வருடத்தில் செத்துவிடும். இவை அனேகமாக ஒரு விளைச்சலையே கொடுக்கும்.

ஆனால், அதிக விளைச்சலை, நீண்ட காலம் கொடுக்க நாம் பயிரிடவேண்டியது 'Indeterminate' தக்காளி வகையே. இவை மூன்று வருடங்கள் வரை தொடர்ச்சியாக ஒவ்வொரு கணுக்களிலும் பூக்கள் கொத்தாத் தோன்றிக் காய்த்து பாரிய விளைச்சலைக் கொடுக்கும். பசுமைக் கூடத்தில் பயிர் செய்தால் ஆறு வருடங்கள் வரை அதிக விளைச்சலை தொடர்ந்து பெறலாம். பசுமைக் கூடத்தில் துளி நீர்ப் பாசனத் தின் கீழ் பயிர் செய்வதன் மூலம் தண் ணீரைச் சேமிக்கவும் முடியும். இந்த வகைத் தக்காளிகளை கலட்டிப்பாங்கான நிலத்திலும் பெட்டிகளில் அல்லது சாக்குகளில் மண்ணை நிரப்பிச் சொட்டு நீர்ப் பாசனத்தின் கீழ் பயிர் செய்யலாம். விதை வியாபார ஸ்தாபனங்களைத் தொடர்பு கொண்டு 'Indeterminate' தக்காளி விதைகள் எனக் கேட்டுவாங்கலாம்.



மாம்பழம் அப்பிள் போன்று தக்காளியிலும் இனத்துக்கு இனம் சுவை சற்று மாறுபடுபது இயல்பானது. அது மரபணுசார்ந்த விஷயம். ஆனால் பொதுவாகவே தக்காளி சுவைப்பதற்கு இன்னுமொரு காரணமும் உண்டு.

'அஜினமோட்டோ' (Ajinomoto - "Essence of Taste"). இதை மொனோ சோடியம் குளுட்டாமேட் MSG (Mono sodium glutamate) எனச் சொல்வார்கள். இது தக்காளியில் 'இயற்கையாக' இருப்பதாலேயே தக்காளி சுவைக்கிறது. இதனாலேயே உலகமெங்கும் உணவுத் தயாரிப்பில் தக்காளி முதலிடம் வகிக்கிறது.

'அஜினமோட்டோ' இல்லாத சைனீஸ் உணவு வகைகளே இல்லை. இதைச் சேர்க்காவிட்டால் சைனீஸ் சாப்பாடு IS 'சப்'பென்று இருக்கும்.



பண்டைய கால சீனர்களும், ஜப்பானியர்களும் தங்களின் உணவில் ஒருவித கடற்பாசியைச் சேர்த்தார்கள். அந்த கடல்பாசி புதுவித சுவையைக் கொடுப்பதை உணர்ந்தார்கள். இந்த கடல் பாசியில் அப்படி என்ன இருக்கின்றது? என்று 1908ம் ஆண்டு, ஆராய்ச்சியில் இறங்கினார் ஒரு ஜப்பானிய பேராசிரியர். கூடுதல் சுவைக்கு காரணம் மொனோ சோடியம் குளுட்டாமேட் என்ற வேதிப் பொருள்தான் என்பதை அறிந்தார். பின்பு அதில் அதிக ஆராய்ச்சிகள் செய்து, மொனோ சோடியம் குளுட்டாமேட்டை எப்படி கடல் பாசியில் இருந்து பிரித்து எடுப்பது என்ற இரகசியத்தை கண்டுபிடித்தார். உடனே ஒரு பணக்கார ஜப்பானிய நிறுவனம், பேராசிரியரை நண்பனாக்கி, அந்த இரகசியத்தை பெற்றுக்கொண்டது. பின்பு அதை வர்த்தகரீதியாகத் தயாரித்து விற்பனை செய்தது.

இந்த நிறுவனம்தான் அஜி-நோ-மோட்டோ (Aji-no-moto). மொனோ சோடியம் குளுட்டாமேட் என்ற வேதிப் பொருளை அஜி-நோ-மோட்டோ என்ற ஜப்பானிய நிறுவனம், செயற்கை முறையில் தயாரித்ததால், அதன் கம்பெனி பெயரான அஜினமோட்டோவே (Aji-no-moto) இந்த வேதிப் பொருளின் பெயராகி பிரபலமாகி விட்டது.

உதாரணமாக Photo copy என்றால் சிலருக்குப் புரியாது. இதையே 'ஜெராக்ஸ்' என்று சொல்லுங்கள். புரிந்துவிடும். ஜெராக்ஸ் என்பது ஒரு நிறுவனத்தின் பெயர்.

# பூக்காமல் காய்க்கும் மரம்?



- ஆசி கந்தராஜா -



இணைய சஞ்சிகை ஒன்றில் வந்த குறுக்கெழுத்துப் போட்டி ஒன்றிலே, பூவாமல் காய்க்கும் மரமெது? என்ற கேள்வியைக் கேட்டு, கீழே பதிலாக பலா மரம் என்றிருந்தது.

நீங்களும் பலா மரங்களில் பூக்களைக் கண்டதில்லை என அடித்துச் சத்தியம் செய்வீர்கள். ஆனால் அது உண்மையல்ல!

பலாமரம் பூக்கும். பலாவின் பூக்கள் பச்சைநிறமாக இருக்கும். அதற்கு மணமோ, கவர்ச்சியோ இருக்காது. ஏனெனில் பலாவில் பூச்சி மூலம் மகரந்தச் சேர்க்கை நடைபெறுவதில்லை. ஆண் பூக்களும் பெண் பூக்களும் இங்கு வேறு வேறாக ஒரே மரத்தில் இருக்கும். ஆண் பூக்கள் நீட்டாக, ஓரலாக பெரும்பாலும் மரத்தின் மேல் கிளைகளில் காணப்படும். இவை ஓரிரு நாள்களுக்குள் உதிர்ந்துவிடும். பெண் பூக்கள், பெரும்பாலும் அடி மரத்திலும் கொப்பின் அடிப்பாகத்திலும் தோன்றும். சில சமயங்களில் மேல் கிளைகளிலும் குறைவான எண்ணிக்கையில் தோன்றுவதுண்டு.

பலாவில் பெண் பூக்கள் என்பது ஒரு மஞ்சரி. இதையே வேறு விதமாகச் சொன்னால், பல பெண் பூக்கள் சேர்ந்த கூட்டுக் காம்பிலியே, மஞ்சரி. மரத்தின் மேலேயுள்ள ஆண்பூக்களின் மகரந்த மணிகள், காற்றின் மூலம் பெண்பூக்களுக்கு கடத்தப்பட, கருக்கட்டல் நடைபெற்று, காய் தோன்றி, பழமாகும்.

பலாப் பழத்தை ஒரு திரள் பழம் அல்லது கூட்டுப் பழம் எனச் சொல்வார்கள். உள்ளே காணப்படுகின்ற ஒவ்வொரு சுளையும், மஞ்சரியிலுள்ள ஒவ்வொரு பூவிலிருந்து தோன்றியவை. பூக்களின் அல்லியும் புல்லியும் சேர்ந்த பூவுறை, சதைப்பற்றான சுளைகளாக மாற, நடுவே விதை, விருத்தி அடைந்திருக்கும்'

'பிலாப் பழத்துக்குள் இருக்கும் 'பொச்சு'..?'

'அவை மஞ்சரியிலுள்ள கருக்கட்டாத பூக்களில் இருந்து வந்தவை'


குறிஞ்சி மலை நகர் Kurinchi Hill City

கொழும்பு - மட்டக்களப்பு A4 வீதியில் 190 ஆவது km இல் 800 m தூரத்தில்

பதுளை மாவட்டம் ஹல்துமுல்லை பிரதேச செயலர் பிரிவு

15 பேர்ச் முதல் 40 பேர்ச் வரையான காணித்துண்டுகள் விற்பனைக்கு!

சுற்றுலா விடுதி, விடுமுறை வீடு ஆகியவற்றுடன் தேயிலை, கோப்பி ஆகிய பயிர்ச்செய்கையும்

அருகில் உள்ள சுற்றுலா மையங்கள்
(100கிமீ சுற்றுவட்டாரத்தில்)
பம்பரகந்த, தியலும, துன்கிந்த, இராவணா, ரம்போடை உட்பட 10இற்கும் மேற்பட்ட நீர்வீழ்ச்சிகள்
தேசிய சரணாலயங்கள் மற்றும் பூங்காக்கள்
Horton Plains National Park, Hakgala Botanical Gardens
Victoria Park, Kande Ela Educational Forest Park
Lunugamvehera National Park, Yala National Park
Udawalawe National Park
கதிர்காமம் முருகன் கோவில், சீதா அம்மன் ஆலயம், ரம்போடை ஆஞ்சனேயர் கோவில்



தனியான வாகன தரிப்பிட வசதி
முழுமையான 24 மணிநேர பாதுகாப்பு சேவை
தொடர்ச்சியான பராமரிப்பு ஏற்பாடு
மின்சார இணைப்பு ஏற்பாடு - குடிதண்ணீர் வசதி
உணவகம் - உள்ளக விளையாட்டுத்திடல்
தேயிலை, கோப்பி, கறுவா தொழிற்சாலைகள்
சுற்றுலா ஏற்பாடுகள்

பேர்ச் 200,000/- (USD 550)
பரப்பு 20 இலட்சம் (USD 5,500)

5th Project
இது ஒரு கற்பகவனம் செயற்திட்டம்
Good Gift Property Developers (Pvt) Ltd



தொடர்புகளுக்கு: 0777 43 5557


## வீடு வாடகைக்குத் தேவை

திருநெல்வேலி, நல்லூர், கச்சேரி ஆகிய வற்றிற்கு அண்மித்த பகுதிகளில் இரண்டு பேர் (கணவன், மனைவி) தங்குவதற்கு சிறிய வீடு வாடகைக்குத் தேவை. தொடர்பு களுக்கு - 0758869168

---

யாழ் நகரினை அண்மித்த பகுதிகளில் வாகனத் தரிப்பிடத்துடன் கூடிய வீடு அல்லது கட்டடம் வாடகைக்குத் தேவை. நீண்டகால வாடகை அல்லது குத்தகை விரும்பத்தக்கது. தொடர்புகளுக்கு - 0777277009

---



## வேலை வாய்ப்பு

தமிழ் தட்டச்சுத் தெரிந்த பக்க வடிவமைப் பாளருக்கான முழுநேர, பகுதிநேர (இரவு) வேலை வாய்ப்பு உள்ளது. அனுபவத்திற்கு ஏற்ப சமபளம் தீர்மானிக்கப்படும். தொடர் புகளுக்கு 0777277009

---

எழுதுமட்டுவாழ் பகுதியில் அமைந்துள்ள இயற்கை விவசாய பண்ணைக்குத் தங்கி நின்று வேலைசெய்யகூடிய ஆண் தோட்டக் காரர் தேவை. உணவு, தங்குமிட வசதி செய்துதரப்படும். தொடர்புகளுக்கு - 0766482303

---

நாவற்குழியில் உள்ள விருந்தினர் விடுதி (Hotel) ஒன்றில் அறை பராமரிப்பாளர், சுத்திகரிப்புத் தொழிலாளி, உணவு பரிமாறுப வர் ஆகிய வேலைவாய்ப்புகள் உள்ளன. சம்பளத்திற்கு மேலதிகமாக ஊக்குவிப்புக் கொடுப்பனவுகளும் வழங்கப்படும். தொடர்பு களுக்கு 0777276818

---

யாழ் இந்துக் கல்லூரிக்கு அண்மையில் அமையவுள்ள உள்ளூர் உற்பத்திப்பொருள் விற்பனை அங்காடியில் விற்பனை உதவியாளர் வேலைவாய்ப்பு உள்ளது. ஆண், பெண் இருபாலாரும் விண்ணப் பிக்கலாம். தொடர்புகளுக்கு 0767403814

---

நாட்டின்பல பாகங்களில்வியாபாரத்தினைக் கொண்டுள்ள நிறுவனத்தின் யாழ்ப்பா ணத்தில் அமைந்துள்ள அலுவலகத்திற்கு கணக்கு உதவியாளர் (Account Assistant) வேலை வாய்ப்பு உள்ளது. கணக்குவழக்கு பராமரித்தல், வங்கி நடவடிக்கைகள் மேற் கொள்ளல் என்பன வேலைகளாக இருக்கும். அனுபவம்வாய்ந்த கணக்காளரின் கீழ் வேலைசெய்யும் வாய்ப்பு. தொடர்புகளுக்கு 0777299386

---

யாழ்ப்பாணத்தில் ஆரம்பிக்கப்படவுள்ள Software and Web Developement நிறுவனத்திற்கு சகல நிலைகளுக்குமான ஆள்சேர்ப்பு ஆரம்பிக்கப்பட்டுள்ளது. அனுப வம் உள்ளவர்கள் மற்றும் பயிற்சிபெற விரும்புபவர்கள் உங்களின் சுயவிபரக் கோவையினை onlinew4u@gmail.com எனும் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வைக்கவும். (மின்னஞ்சலின் subject இல் Software and Web Developement என குறிப்பிட்டு அனுப்பவும்)

---

யாழில் இருந்து வெளிவரும் தினசரி பத்தி ரிகை ஒன்றிற்கு ஒப்புநோக்குநர் (Proof Reader) தேவை. தமிழில் புலமையும் தெளி வான கண்பார்வையும் உள்ளவர்கள் விண்ணப்பிக்கலாம். பகல் மற்றும் இரவு வேலைகள் உள்ளன. உங்களது விண்ணப் பங்களை அனுப்பி வைக்கவேண்டிய முகவரி - 551A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

---

யாழ்ப்பாணத்தில் இயங்கும் பிரபல தனியார் IT நிறுவனத்திற்கு நிர்வாக உத்தியோகத்தர் (Office Admin) வேலைவாய்ப்பு உள்ளது. அடிப்படை ஆங்கில, கணினி அறிவு அவசி யமானது. தொடர்புகளுக்கு 0777113333


---

விளம்பர சேகரிப்பாளர் (Advertisement Collector) முழுநேர, பகுதிநேர வேலை வாய்ப்பு - அடிப்படைச் சம்பளம் மற்றும் மேலதிக கொடுப்பனவு வழங்கப்படும். தொடர்புகளுக்கு 0777277009

---

வாகன சாரதிக்கான வேலைவாய்ப்பு. light vehicle driving license - B, C, G1 சாரதி அனுமதிப்பத்திரம் உள்ளவர்கள் விண் ணப்பிக்கலாம். தொடர்புகளுக்கு - 077068 4905

---



## காணி விற்பனைக்கு

மலையகத்தில் அப்புத்தளை நகரிற்கு அருகில் 20 பேர்ச் - 40 பேர்ச் காணிகள் விற்பனைக்கு. விடுமுறை வீடு, விடுமுறை விடுதி ஆகியவை அமைக்க ஏற்ற சூழல். மண்சரிவு மற்றும் வன விலங்கு அபாயம் அற்ற பகுதி. பாதுகாப்பு, பராமரிப்பு, உரிய அனுமதிகள் என்பன ஏற்பாடு செய்து செய்து தரப்படும். தொடர்புகளுக்கு 0777435557

---

A9 வீதியில் இருந்து 1 km தூரத்தில் எழுது மட்டுவாழ் - நாகர்கோவில் வீதியில் 2 பரப்பு, 4 பரப்பு காணிகள் விற்பனைக்கு. இயற் கையான சூழலில் உங்களின் ஓய்வு காலத்தினை அமைதியாகவும் ஆரோக்கி யமாகவும் வாழ்வதற்கு ஏற்ற இடம். தொடர் புகளுக்கு 0779789177

## FOR SALE விற்பனைக்கு

பழமையான (Antique) கார் பிரியர் களுக்கான Austin Cambridge A55 கார் விற்பனைக்கு உண்டு. திருத்த வேலை கள் உள்ளன. சரியான ஆவணங்கள் உண்டு. தொடர்புகளுக்கு 07777 40413

---

தரமான சுவையான குறிஞ்சி கோப்பி விற்பனைக்கு உண்டு. மலையகத்தில் இருந்து பெறப்பட்ட தரமான கோப்பியில் இருந்து சிறப்பாக தயாரிக்கப்பட்ட யாழ்ப்பாண சுவையுடனான கோப்பிகள் 100g Tinகளில் பெற்றுக்கொள்ளலாம். தொடர்புகளுக்கு 0764438620

---

கறுவாக் கன்றுகள் விற்பனைக்கு உள் ளன. யாழ்ப்பாணத்துச் சீதோஷ்ணத்தில் வளரக்கூடிய கறுவாக் கன்றுகள். 5 - 7 கன்றுகள் அடங்கிய பை 150 ரூபாய் மட் டுமே. தொடர்புகளுக்கு 0766482303

---

4TB முதல் 18TB வரையான Hard Disk யாழ்ப்பாணத்தில் விற்பனைக்கு உண்டு. Video Editing மற்றும் CCTV Camera storage போன்ற தேவைகளுக்கு உகந்தது. 6TB Sea Gate hard disk - Rs34,000, 4TB TOSHIBA hard disk - Rs23,000, 4TB WD Purple hard disk - Rs21,000, 18TB WD Element external hard disk - Rs90,000, 8TB WD My book external hard disk - Rs60,000, 8TB Seagate hard disk - Rs61,000. தொடர்புகளுக்கு 0762399874

வாரஇதழ்...

தமிழர் பொருண்மியம் வாரமலர் TAMILS ECONOMY

| கறுப்பு வெள்ளை விளம்பரம் | |
|---|---|
| வரி விளம்பரம் | இலவசம் |
| பெட்டி விளம்பரம் | 600.00 |
| ¼ பக்கம் | 3,500.00 |
| ½ பக்கம் | 6,000.00 |
| முழுபக்கம் | 10,000.00 |

| வர்ண விளம்பரம் | |
|---|---|
| பெட்டி விளம்பரம் | 900.00 |
| ¼ பக்கம் | 5,000.00 |
| ½ பக்கம் | 9,000.00 |
| முழுபக்கம் | 16,000.00 |

தமிழர் பொருண்மியம் வாரஇதழில் உங்கள் விளம்பரங்களை வெளியிட

0777 27 69 49 | 076 443 8622

#68, குறோசெட் வீதி, யாழ்ப்பாணம்.




Dr.எஸ்.கிருபானந்தகுமாரன்
[BVSc,MVSc]
கால்நடை வைத்தியர்

# கால்நடைப் பண்ணைகள் ஏன் தோல்வியடைகின்றன...?

நான் கடந்த வாரம் குறிப்பிட்டது போல பெரும் முதலீட்டுடன் தொடங்கப்படும் இந்தப் பண்ணைகள் பெரும்பாலும் கிரமமான அளவுத் திட்டங்கள், பொருத்தமான இடத்தெரிவுடன் அமைக்கப்பட்டிருக்கா. வாகனங்கள் செல்லாத, தண்ணீர் வசதியற்ற, மின்சார வசதியற்ற, பால் முட்டை போன்ற உற்பத்திகளை இலகுவில் விற்க முடியாத , பண்ணைப் பொருட்களை அவசரத்தில் வாங்கமுடியாத, கால்நடை வைத்திய வசதியற்ற, யானைகள், சிறுத்தைகள் நடமாடும் அபாயகரமான இடங்களாக இருக்கும் அதாவது, ஒரு கால்நடைப் பண்ணை தொடங்க பொருத்தமற்ற இடம். யாராவது ஒரு உறவுக்கார உள்ளூர் நபர் இந்த மாதிரியான வாழ்நாளில் விற்கவே முடியாத காணிகளை தலையில் கட்டியிருப்பார்கள். பெரும்பாலும் அங்கு பல லட்சம் கொமிசன் கை மாறியிருக்கும். பண்ணைகளில் கட்டப்படும் தேவையற்ற கட்டுமானங்கள் கூட எதற்காக அமைக்கப்பட்டன என்பது புதிராக இருக்கும். அந்தந்த வலயத்துக்கும் பண்ணைகளும் கால்நடைகளும் அது அமைந்துள்ள காலநிலை வலயத்துக்கும் கிஞ்சித்தும் பொருத்தமற்றவை.



எனக்கு தெரிந்த இரண்டு பண்ணைகளைக் குறிப்பிடுகிறேன். பளையில் ஒரு கோழிப் பண்ணை. அங்கு மின்சார வசதியும் இல்லை. ஒழுங்கான தண்ணீர் வசதியும் இல்லை. பல இலட்சம் ரூபா முதலீட்டில் தொடங்கப்பட்டது. மின்சாரத்துக்கு சக்தி மிக்க ஜெனரேட்டர்களை பாவித்திருந்தனர். அதற்கே மாதம் பல லட்சம் செலவாகியிருக்கும். கோழிகளும் உருப்படியாக வளர்வதுமில்லை. மழை காலத்தில் அதிக தண்ணீர் தேங்குவதால் கோழிகள் அதிகளவில் நோய்ப்பட்டு இறந்தன. குடிதண்ணீர் உப்பு அதிகம் இருப்பதால் அதிக செலவில் வெளியிலிருந்தே கொண்டு வரவேண்டி இருந்தது. தவறுகளைச் சுட்டிக்காட்டினால் அதை ஏற்றுக் கொள்ளும் பக்குவம் அங்கிருந்த தொழிலாளியிடமோ முகாமையாளரிடமோ இருக்கவில்லை. பண்ணையையும் அவர்களையும் பார்த்தவுடன் புரிந்து விட்டது. நீண்ட காலம் நிலைக்காது என்று. யாருடைய பணம் அநியாயமாக போகிறது என்று தீர விசாரித்த போது புலம் பெயர் தமிழர் ஒருவர் இங்குள்ள மக்களுக்கு வேலை வாய்ப்பை கொடுக்க வேண்டும் என எண்ணிக் கொழும்பிலுள்ள உறவினர் ஒருவரிடம் இது தொடர்பாக கேட்க,அவர்தான் இந்த இடத்தில் இந்த முறையில் பண்ணையை அமைத்திருக்கின்றார். வெளி நாட்டு நபர், பளை தான் பண்ணை அமைக்கச் சரியான இடம், அங்கு பெரிதாக எதுவுமே செய்யத்

தேவையில்லை தானாக பண்ணை வளரும் என அவர் மனதில் நீண்ட காலமாக பதித்து வைத்து இருந்த எண்ணம் காரணமாக பல இடங்களில் தேடிப் பொருத்தமற்ற மின்சாரம் இல்லாத தண்ணீர் தேங்கும் குடி தண்ணீர் அற்ற அந்த இடத்தை வாங்கினார்.. அதாவது பளையில் பண்ணை அமைக்கும் அவரின் எண்ணம் நிறைவேறிவிட்டது. அவ்வளவு தான். அவர் உறவினர் கொழும்பில் இருந்துதான் பண்ணையை பார்க்கிறார். சில மாதங்களுக்கு ஒரு முறைதான் வருவார். அவர் அங்கே வேலையாட்கள் இங்கே தங்கள் விருப்பத்துக்கு பண்ணையை நடத்த அது அந்தப் புலம்பெயர் தமிழரின் பணத்தை அழித்திருந்தது.

அடுத்தது வவுனியா குருக்களூரில் பல கோடி முதலீட்டில் யானைக் காட்டின் நடுவே கட்டப்பட்ட மாட்டுப்பண்ணை. அங்கு கோடையில் மருந்துக்கும் தண்ணீர் கிடைக்காது. இருநூறுக்கும் மேற்பட்ட ஜெர்சி இன மாடுகளை யாழ்ப்பாணத்திலிருந்து சட்ட விரோதமாக கொண்டு வந்து வளர்க்கத் தொடங்கினார் ஒரு புலம் பெயர் தமிழர். அங்கு புல் நட முடியாது. அந்தளவு வறண்ட நிலம். புல்லை வழங்க முடியாது வெறும் அடர்வு தீவனத்தை மட்டும் வழங்கி அந்த மாடுகள் சினை பிடிக்காது போயின. இளம் விலங்குகள் கொஞ்சம் கொஞ்சமாக இறக்கத் தொடங்கின. சில நாட்களில் மாட்டுப்பண்ணைக்கு அருகில் பிரம் மாண்டமான கோழிப் பண்ணைஅமைத்தார். அந்த கோழிகளுக்கு உணவு வழங்க தீவனக்கடை அமைத்தார். சிறிது காலத்தில் அவை எல்லாம் மூடப் பட்டு வெறும் கட்டிடங்களாக இன்று காட்சி தருகின்றன.

வெளிநாட்டு உரிமையாளர்களால் பண்ணையை நேரடியாக அவதானிக்க முடியாது. உறவினர்களை முகாமை செய்யவிட அவர்கள் முடிந்தவரை பணத்தைச் சுருட்டுவதிலேயே குறியாக இருந்தனர். கால்நடை வைத்தியரின் ஆலோசனையை அவர்கள் ஏற்றுச் செய்வதாய் இருக்கவில்லை. குறைந்த பட்சம் மாடுகளுக்குத் தேவையான பசும் புற்களை பயிர்செய்யக் கூட அவர்கள் தயாராக இருக்கவில்லை. பணத்துக்கு சைலேஜ் வாங்கியிருந்தனர். தரமற்ற புற்களை ஊர் மாடுகளுடன் மேயவிட்டனர்.

இந்த பண்ணையில் முகாமை செய்த உறவினர்கள் பயனடைந்தனர். விலங்குணவு கடைக்காரர்கள் பயனடைந்தனர். யாழ்ப்பாணத்து கள்ள மாட்டு வியாபாரிகள் பயனடைந்தனர். யாழில் பண்ணையாளரின் கைத்தீனில் வளர்ந்த ஜேர்சி மாடுகளை இங்கு தண்ணீரும் புல்லும் இல்லாத இடத்துக்கு கொண்டு வந்து மெலிய வைத்து அதிக வெப்ப அயர்ச்சிக்கு உட்படுத்தி இறக்கும்போது கருவாடாக்கித்தான் விட்டனர். என்னைப்போன்ற கால்நடை வைத்தியர்களின் அவதானிப்பின் அடிப்படையில் திருத்தங்கள் செய்ய இங்குள்ள வேலையாட்கள் தயாராக இருக்கவில்லை. தமக்கு வேலை கூடி விடும் என்பதால்போல. வைத்தியரை அடிக்கடி மாற்றுவார்கள். சில வேளைகளில் வைத்தியர் போன்று நடிக்கும் சட்டவிரோத நபர்களை நாடுவார்கள். வடக்கில் தற்போது பல இந்த மாதிரி பேர் வழிகளைக் காணமுடிகிறது.



பேஸ்புக், வடஸ்அப், வைபர் என குழுக்களைத் தொடங்கி பல பண்ணை ஆலோசனைகளை வழங்கும் இந்த நபர்கள் மேற்படி வெளிநாட்டு முதலீட்டாளர்களைப் பிடித்துவிடுகிறார்கள். மாடு ஆடுகளை வாங்கி கொடுப்பார்கள். சிகிச்சை செய்வது போன்ற படங்களை தமது சமூக ஊடக குழுக்களில் பதிந்து ஒருவித விம்பத்தை ஏற்படுத்துகின்றனர். சிலர் பண்ணைக்கடைகளையும் நடத்துகின்றனர். தம்மை வைத்தியர் போல பாவனை செய்து முகாமைத்துவப் பிரச்சினைகளை தீர்த்து வைக்கிறேன் என்று சொல்லி களத்தில் குதித்து அவர்களிடம் சுருட்டக் கூடியவற்றை சுருட்டுகின்றனர். எல்லாம் முடியத்தான் முறையான கால்நடை வைத்தியர்களிடம் வந்து சிகிச்சையளிக்க வேண்டும் என முரண்படுகின்றனர். சில வெளிநாட்டு முதலீட்டாளர்கள் அந் தந்த நாடுகளில் உள்ள கணக்கில் வராத கறுப்பு பணத்தையும் நலன்புரி பணத்தையும் முதலிடுவதால் இங்கு அந்தப் பணம் ஏமாற்றப்படும்போது திருடனுக்கு தேள் கட்டிய நிலைதான் ஏற்படுகிறது.

உண்மையில் இந்த மாதிரியான பண்ணைகள் மிகப் பாரிய அளவில் தொடங்கப்படுவது தேவையற்றது. இவற்றை தொழில் இயந்திரங்களை வைத்து செய்வது கிடையாது. உயிர் சம்பந்தப்பட்டது. சிறுக்சிறுக பெறும் அனுபவம் தான் தொழிலை சிறக்கச் செய்யும்.

உரிமையாளர் நேரடியாகச் சம்மந்தப்படும் பண்ணைகளே ஓரளவுக்குத் தப்பிப் பிழைக்கின்றன. ஏனையவர்கள் தமக்கு எவ்வளவுக்கு வருமானம் கிடைக்கும் என்பதில் தான் குறியாக இருப்பார்கள் .நான் அவதானித்தமட்டில் பொருத்தமற்ற கால்நடைகளைப் பொருத்தமற்ற இடத்துக்கு அதிக அளவில் கொண்டு வருகின்றனர். ஆனால் அவற்றைப் பராமரிக்க வேலையாட்களை குறைத்து அதில். மிச்சம் பிடிக்க நினைக்கிறார்கள். வைத்தியச் செலவையும் குறைக்க எண்ணி தேவை ஏற்படும் போதும் வைத்தியரை அழைப்பதில்லை அல்லது வைத்தியரல்லாத நபர்களிடம் செல்கிறார்கள் அல்லது சுய மருத்துவம் செய்கிறார்கள். சில மருந்துக் கம்பனிகள் தமது விற்பனை வருமான இலக்குக்காகத் தாமே நேரடியாக மருந்துகளை விநியோகிக்கின்றன.

இந்தத் தொழிலில் நிரந்தர முதலீடுகளான கொட்டகை கால்நடைகளுக்கான செலவுகள் அதிகம். வருமானம் சிறுக சிறுகதான் வரும். உதாரணமாக வயதான மாடுகளை வாங்கினால் அவை இலகுவில் சினை பிடிக்கா, விரைவில் கல்சிய குறைபாடு மற்றும் கீட்டோசிஸ் நிலை ஏற்பட்டுச் செலவுகள் கூடும். மிகவும் இளம் மாடுகள் எனின் அவை கருவுறும் வயதை அடைந்து சினைப்பட்டு கன்று ஈன வருடக் கணக்கில் ஆகலாம். ஆனால் மாடுகளுக்குரிய தீவன, ஏனைய செலவுகள் போய்க்கொண்டு தான் இருக்கும். செலவு போகிறது என்பதற்காக நோயுற்ற மாடுகளை அப்படியே விட முடியாது. இந்த தொழிலில் நீண்ட பொறுமை வேண்டும். ஏனைய தொழில்களை போல் ஓரிரு நாளில் சில விடயங்களை சரிப்படுத்த முடியாது. இந்த மாதிரியான ஆபத்துக்களை தெரிந்துதான் களத்தில் இறங்கவேண்டும். அடுத்த வாரம் இன்னுமொரு தோல்விக் கதையைப் பார்ப்போம்...



வேதநாயகம் தபேந்திரன்

# சிறு துரும்பும்...

சில மாதங்களுக்கு முன்பாக நண்பர் ஒருவருடன் காரைநகருக்கு வெளிக்கள வேலைக்காகச் சென்று வந்தேன். திரும்பும் போது நேரம் மாலை 5 மணி. நண்பர் பொன்னாலைக் கடலில் வலைவீசி மீன்பிடிக்கும் ஒருவரிடம் மீன் கேட்டார்.

நல்ல கிளாக்கன் மீன் இருக்கிறதென 500 நூறு ரூபாவுக்குத் தாராளமாக மீன் தந்தார். மீனை வாங்குவது என்றால் சொப்பிங் பை தேவை. அவரிடமோ மீனவனிடமோ சொப்பிங் பை இல்லை.

என்ன செய்வது காரைநகர் வலந்தலைச் சந்திக் கடைக்குத் திரும்பப் போவோமென்றார்.

நான் சிரித்துக் கொண்டே எனது அலுவலகப் பையில் இருந்து ஒரு சொப்பிங் பையை எடுத்துக் கொடுத்தேன்.

மிகவும் பேரானந்தத்தோடு உங்களுக்குச் சொப்பிங் பை என்னவென்று கிடைத்தது எனக் கேட்டார்.

மத்தியானச் சாப்பாட்டுப் பார்சல் வைத்துக் கொண்டு வந்த பை நல்ல நிலையில் இருந்தது. இன்னுமொரு தேவைக்குப் பயன்படுத்தலாமென்று எறியாமலே வைத்திருந்தேன். இன்னுமொரு தேவைக்குப் பாவிக்கலாமென்று. அது தான் இது எனக் கொடுத்தேன்.

அரைமணி நேரமும் பெற்றோலும் மிச்சம்.

எனது நண்பரிடம் அந்த ஒரு சொப்பிங் பை ஒரு மனமாற்றத்தை ஏற்படுத்தியது.



எந்தவொரு பொருளையும் தேவையில்லையென்று எறியக் கூடாது.

இதை நீங்கள் எங்கே கற்றீர்களென என்னைக் கேட்டார். எனது தந்தையார் கற்றுத் தந்த பாடம். சிறு துரும்பும் பல்லுக் குத்த உதவுமென்ற அவரது அனுபவ மொழி தான் இப் பழக்கம் என்றேன்.

எமது தாயகத்தின் பொருளாதார நிமிர்வுக்கு இது போன்ற சின்னச் சின்னப் பொருள்களை மீள்பாவனைக்கு உட்படுத்தும் பழக்கத்தைக் கடைப்பிடிப்போமாயின் சிறுதுளி பெருவெள்ளம் என்பது போலச் சின்னச் சின்னச் சேமிப்புகள் பெரியதொரு பொருளாதார வளத்தை நாட்டில் ஏற்படுத்தும்.

அதனூடாகச் சூழல் மாசடைவதைத் தடுப்பதுடன் பொருளாதாரச் சக்கரத்தை முன்னோக்கி நகர்த்தி நாட்டை முன்னேற்றலாம்.

எமது வீட்டில் காட்போட் பெட்டியொன்றை வைத்திருந்து அவ்வப்போது அகப்படும் ஆணிகள், நட்டுகள், ஊசிகள், நூல், பிளாஸ்ரிக் துண்டுகள், குழாய்கள் போன்றவற்றைச் சேகரிக்க வேண்டும்.

வீட்டில் வேறொரு வேலை நடக்கும் போது அதிலிருந்து தேவையான சில பொருள்களைப் பெற்று நிறைவேற்றலாம்.

ஐக்கிய நாடுகள் சபையின் உணவு விவசாய ஸ்தாபனத்தின் அறிக்கையின் படி இலங்கையர்களில் பெரும்பாலானோர் உணவுப் பாதுகாப்பிலும் உணவு விரயத்தைத் தடுப்பதிலும் அக்கறை குறைந்தவர்களாக உள்ளமை தெரியவந்தது.

இது எமது நாட்டின் பொருளாதார வளர்ச்சியைப் பாதிக்கின்றது.

உணவுப் பாதுகாப்பில் மிக உயர்வான பாரம்பரியங்களைக் கொண்டிருந்த சமூகக் கட்டமைப்பு எம்முடையது.

வற்றில் இடல், மூடல் பெட்டியினுள் பாதுகாத்தல், நெருப்பில் வாட்டுதல் போல ஏராளம் பாரம்பரிய முறைகளைக் கடைப்பிடித்துச் சிக்கனம் பேணிய சமூக அமைப்பைக் கொண்டவர்கள் நாம்.

இவற்றைக் கைவிட்டு மேற்குலக உணவு நுகர்வு வட்டத்தினுள் அகப்பட்டு குளிர்சாதனப் பெட்டிக் கலாசாரத்தினுள் அகப்பட்டு மின்சாரக் கட்டணத்திற்காகக் காசைக் கொட்டி அநாவசியச் செலவுகளைச் செய்கின்றோம்.

எமது அன்றாடச் செலவில் உணவுக்கான செலவு உயர்வாக உள்ளது. அதனை மீதப்படுத்துகின்ற திட்டமிடல்களைச் செய்வதற்குரிய வழிமுறைகளைக் கையாள வேண்டும்.

மண்டபங்களில் குடும்ப நிகழ்வுகளைப் பொது நிகழ்வுகளை வைக்கின்ற போது பங்குபற்றுநர்களின் சரியான எண்ணிக்கையைத் திட்டமிடுவதில் ஏற்படும் தவறு காரணமாகப் பல்லாயிரம் ரூபா பெறுமதியுள்ள உணவுப் பொருள்கள் அழிவடைகின்றன. இவற்றைத் தடுப்பதற்கான திறமையான வழிமுறையைக் கண்டறிவதும் எமது பொருளாதார வளர்ச்சிக்குத் தேவையானதாகும்.

வளங்கள் மட்டுப்படுத்தப்பட்டவை. அவற்றைச் சரியான முறையில் பயன்பாட்டுக்கு உட்படுத்திப் பொருளாதார வளர்ச்சியை நோக்கி நாட்டை நகர்த்துதல் யாவரினதும் கடமையாகும்.



ஆனந்தன் பிரேம்நாந்
லக்சி பண்ணை

# அதிகலாபம் தரும் மிளகாய் செய்கை

அதிக இலாபம் தரும் பயிர்ச்செய்கைகளில் மிளகாய் பயிர்ச்செய்கையும் ஒன்று. இதனைப் பயிரிட்டு அனுபவப்பட்ட விவசாயிகள் நன்கறிவார்கள்.

நல்ல வடிகால் வசதியுடைய நிலங்கள் மிளகாய் பயிரிட ஏற்றவை ஆகும்.

கடல்மட்டத்திலிருந்து 2000 மீற்றர் உயரம் வரை உள்ள வெப்பப் பிரதேசங்களில் மிளகாய் நன்கு வளரும்.

ஜனவரி - பிப்ரவரி, ஜூன்-ஜூலை, செப்டம்பர் ஏற்ற பருவங்கள். ஆனால் அனுபவம் வாய்ந்த விவசாயிகள் பச்சை மிளகாய் எல்லாக் காலங்களிலும் நடுகை செய்ய ஏற்றவை என்று கூறுகிறார்கள்,

ஓர் ஏக்கருக்கு 400 கிராம் (20,000 நாற்றுக்கள்தேவைப்படுகின்றன.

இலங்கையில்

M.I.2

M.I. பச்சை

M.I. வலணிய

M.I.C.H

M.I.C.H.3

கல்கிரியாகம. போன்ற இனங்கள் இருந்தாலும்.

நாட்டு வகைகளைச் தேர்வு செய்து



பயிரிடுவது சிறந்ததாக இருக்கும்.

பதியம் வைத்தல் (நாற்றங்கால்) மேட்டுப்பாத்திகள் 1 மீட்டர் அகலம், 3 மீ. நீளம், 15 செ.மீ. உயரம் கொண்டதாக இருக்க வேண்டும்.

நாற்று மேடை அமைக்கும் இடத்தில் வைக்கோல் அல்லது காய்ந்த சருகுகளை போட்டுத் தீ இட்டு எரிக்க வேண்டும்.

இவ்வாறு செய்வதனால் எதிர்காலத்தில் இலைச்சுருள் நோயினை ஓரளவு கட்டுப்படுத்தலாம்.

பின்பு அவ்விடத்தில் மக்கிய தொழு உரம் இட்டு நாற்று மேடை அமைக்க வேண்டும். பாத்திகளில் விதைகளை 2 செ.மீ. ஆழத்திலும் 5-10 செ.மீ. இடைவெளியிலும் வரிசையில் விதைத்தபிறகு வைக் கோல் அல்லது உலர்ந்த இலைகளைப் பாத்திகளின் மேல் பரப்பிப் பூவாளியால் தண்ணீர் ஊற்றவும். விதைத்த 10 நாட்களில் பாத்திகளில் பரப்பிய வைக்கோலை அகற்றிவிட வேண்டும்.

வேறு இடத்தில் நாற்றுக்களைப் பெற்று நடுவதாக இருந்தால்.

அவர்கள் மேற்கூறிய விடயத்தை பின்பற்றி நாற்று மேடை அமைத்தவர்களாக இருக்க வேண்டும்.

நடுவதற்கு 40 முதல் 45 நாட்கள் வயதுடைய நாற்றுக்களே ஏற்றவை.

நேரடியாக விதைக்கப்பட்ட பாத்திகளில் விதைத்த 30 நாட்களுக்குப் பிறகு தேவையான பயிர் எண்ணிக்கை இருக்குமாறு கலைத்து இடைநிறைவு செய்வது அவசியம்.

நிலத்தை 4 முறை உழுது, கடைசி உழவின்போது ஹெக்டருக்கு 25 டன் தொழு எரு அல்லது மக்கிய குப்பை இட்டுப் பயிருக்குப் பயிர் 2 1/2 ×1 1/2 அடி இடைவெளியில் நடவேண்டும்.

நாட்டிய 45 ஆவது நாளில் உரம் இட்டு நீர் பாய்ச்ச வேண்டும்.

பூக்கள், பிஞ்சுகள் உதிர்வதைத் தடுக்கவும், பூக்கள் மலர்வதைத் தூண்டவும் நாட்டிய 60 அல்லது விதைத்த 100வது நாளில் ஒரு முறையும், 30 நாட்களுக்குப் பிறகு இரண்டாவது முறையும் இயற்கை முறையில் உருவாக்கப்பட்ட தயிர்க் கரைசல். மற்றும் வளர்ச்சி ஊக்கியான ஜீவாமிர்தத்தினைப் பயன்படுத்தலாம்.

நாட்டி 30 நாட்களுக்கு ஒருதடவை இயற்கைக் கிருமிநாசினியான அக்கினி அஸ்திரா, பூண்டு கரைசல், மூலிகை கரைசல் போன்றவற்றை மாறி மாறி பயன்படுத்தலாம்.

குறிப்பு

பூக்க ஆரம்பித்த பிறகு கிருமிநாசினிகளைக் காலையில் பயன்படுத்தாமல் மாலை வேளையில் பயன்படுத்த வேண்டும்.

பச்சை மிளகாயை நட்ட 75 நாட்கள் அல்லது விதைத்த 105 நாட்களிலும், பழுத்த பழங்களை ஒரு மாதத்திற்குப் பின்பும் அறுவடை செய்யலாம்.

மேலும் 3 முதல் 4 மாதங்களுக்கு தொடர்ந்து அறுவடை செய்யலாம்.

முதல் இரண்டு பறிப்புகளிலிருந்து பச்சை மிளகாயும்.

அடுத்த பறிப்புகளிலிருந்து பழுத்த மிளகாயும் அறுவடை செய்யலாம்.


விளைச்சல்: ஒரு ஏக்கருக்கு 210-240 நாட்களில், காய்ந்த மிளகாய் 1 - 2 டன், பச்சைமிளகாய் 6 - 8 டன் பெறலாம்.

இதுபோன்று முற்றுமுழுதாக இயற்கை முறையில் பச்சை மிளகாய் பயிர்ச்செய்கை செய்ய முடியும்.









- காரைக்கவி கந்தையா பத்மானந்தன் -

# சண்முகத்தார் ஒரு சங்கதி கேட்டியளோ..?



## எங்கட ஆச்சி

எங்கட ஆச்சி ஆரெண்டாலென்ன தனக்குத் தனக்கு ஏலுமான வேலையளைத் தான்தான் செய்யவேணும் அப்பதான் உடம்பும் மனசும் உயிரும் நல்லா இருக்கும் எண்டு நெடுகவும் சொல்லுறவ. இல்லாட்டி கடைசியில ஒண்டும் நடக்காது எண்டுவா. உண்டான மனுசருக்கு மூண்டு வருத்தம் வரும் ஒண்டு உயிர்வருத்தம் ரெண்டாவது உடல் வருத்தம் மூண்டாவது மனவருத் தம். உந்த வருத்தங்கள் மெத்திப்போச்சுது எண்டால் ஒருத்தராலையும் நிம்மதியாச் சீவிகேலாது எண்டுவா .உந்த வருத்தங் கள் ஒண்டும் வரப்படாது எண்டு போட் டுத்தான் அவையவை தங்களுக்கு இயலு மான வேலையளைச் செய்யவேணும் எண்டிறது எண்ம் சொல்லுவா.

உப்பிடி வேலையளைச் செய்தா அவைக்கு உடம்புக்கு நல்ல பயிற்சி வருத் தம் வாதை ஒண்டும் வராது அதேநேரம் வேலையிலை கவனம் இருக்கிறதாலை மனசுக்கும் அது நல்ல பயிற்சி. அதால மனசிலை தேவையில்லாத எண்ணாங் கள் சிந்தனையள் வராது. உதாலை மனு சருக்கு மனவருத்தம் ஒண்டும் வராது. அதுகும் உந்த வேலையளைக் கோயில் வழியை போய்ச் செய்தா உயிர்வருத்தமும் வராது. உதாலைதான் எங்கட ஆக்கள் கடவுளை அடையிறதுக்கு சரியை யும் ஒரு மார்க்கம் எண்டு சொல்லிக் கோயில் வழியை போய் வேலையளைச் செய்யச் சொன்னவை எண்டுவா . ஆனால் இப்பத்தே இளந் தாரியளுக்கும் குமரியளுக்கும் உது ஒண்டுக்கும் நேரம் இல்லை . அவளவை ஆத்தைமார் அவிச்சுப் போட திண்டு போட்டு சயிக்கில்த்தடி ஒண்டை எந்த நேரமும் கவட்டுக்கை வைச்சுக்கொண்டு அது படிக்கிறம் இது படிக்கிறம் எண்டு ஒரு இலக்கு இல்லாமல் திட்டம் இல்லாமல் ஊர் மேஞ்சு கொண்டு திரியுதுகள் எண்டு சொல்லுவா .

உதையேன் சொல்லுறன் எண்டால் நான் எங்கட வீட்டுக்கு கிட்ட உள்ள மைதானம் ஒண்டுக்கு ஒவ்வொருநாளும் நடக்கப் போறனான். நடைபாதையைச் சுற்றிவர கிட்டத்தட்ட நானூறு மீற்றருக்கு இருக்குது.நான் சரியாக பத்துத் தரம் காலமையும் பின்னேரமும் நடக்கிறதை ஒரு வழக்கமா வைச்சிருக்கிறன். இண்டைக்கும் காலமை நான் நடக்கேக்கை எனக்குப் பின் னால ஓடி வந்த ஒரு இளந்தாரிப்பொடியன் என்னை ஒரு மாதிரி நக்கலாகப் பாத்தபடி என்னை முந்திப்போனான். பொதுவா ஓடிப்போற ஆக்கள் அதுகும் பெடியள் நடக்கிற ஆக்களை அதுகும் என்னைப்போல பெரிசுகளை இளக்கார மாப் பாப்பினம். நான் என்ரை பாட்டில ஒரு இருநூறு மீற்றர் தூரம் நடந்துபோனா என்னை நக்கலாப்பாத்துப் போட்டுப் போன பெடிப்பிள்ளை நாக்கைத் தொங்க விட்டபடி களைச்சுப் போய் நிண்டிருந்தான் . எனக்கெண்டா அவனில சரியான பரிதாபமா இருந்திச்சு. அவன் என்னை நக்கலாப் பாத்தா மாதிரி நான் அவனைப் பாக்கேல்லை .

ஏனெண்டால் இண்டைக்கு கனபேர் இப்பிடித்தான் உந் தப் பெடிப்பிள்ளை மாதிரி ஒரு திட்டமும் இல்லாமல் ஒரு இலக்கும் இல்லாமல் ஆரும் சொல்லிற கதையைக்கேட்டு ஓடிக்கொண்டு இருக்கினம். அவைக்கு என்னத்தை நோக்கி



தாங்கள் ஒடுறம் எண்டு ஒரு விளக்கமும் இருக்காது. சில நேரம் மற்றவை ஓடுகினம் தானே நானும் ஓடுவம் எண்டு போட்டு ஓடுகினம். உப்பிடித்தான் எங்கட பெடிபெட்டையள் படிகிறதுக்கு எண்டு தெரிவு செய்யிற துறையளும் இருக்குது. அவன் படிக்கிறான் அல்லது அவள் படிக்கிறாள். அப்ப நானும் படிப்பம் எண்டு தொடங்கி படிக்க வெளிக்கிட்டு காசை யும் நேரத்தையும் வீணாக்குதுகள். தாய் தேப்பனும் அயலட் டையோட இருக்கிற போட்டியிலை ஒரு மண்ணாங் கட்டியும் விளங்காமல் பெடி பெட்டையை அதைப்படி இதைப்படி எண்டு அரியண்டம் குடுத்துத் துரத்துங்கள். பேந்து அதுகள் ஒண்டுக் கும் பிரயோசனமில்லாத படிப்பைப் படிச்சுப்போட்டு வேலை வெட்டி ஒண்டும் இல்லாமல் தெரு அளந்துகொண்டு திரிஞ்சு கண்டவன் கிண்டவன் எல்லாரிட்டையும் திட்டும் பொழிவும் வாங்கிக்கொண்டு இருக்குங்கள் .

உண்ணான எங்கட ஆச்சி சொல்லுறமாதிரி ஒரு தெளி வான இலக்கும் திட்டமும் இருக்கிறவன் மெதுவாக நடந் தெண்டாலும் தன்ரை இலக்கை அடையுறான். இலக்கும் திட்டமும் இல்லாதவன் வேகமாப் போனாலும் இடையில ஒண்டும் இல்லாமல் நிக்கிறான். நான் என்ரை திட்டமிட்ட பத்துச் சுற்றுகளையும் நடந்து முடிக்கும் வரையும் அந்தப்பெடி பேந்து எழும்பி நடக்கக்கூடயில்லை. வடிவேலுவின்ரை எதையும் பிளான் பண்ணிச் செய்யவேணும் எண்ட வசனம் மனசுக்கை மெல்ல வந்து போச்சுது.

இவ் வாரஇதழ் நல்லூர், No.68, Crossette lane, யாழ்ப்பாணத்திலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 12.02.2023இல் வெளியிடப்பெற்றது.